


**சந்தா விபரம்**

| | ரூ. அ. |
|---|---|
| வருட சந்தா. .... .... .... | 3—0 |
| 6 மாத சந்தா. .... .... .... | 1–12 |
| வெளிநாடுகளுக்கு வருட சந்தா | 4—0 |

ஆதி திராவிட சங்கங்களுக்கு பாதி சந்தாவுக்கு அனுப்பப்படும்.

முன் பணமின்றி பத்திரிகை அனுப்பப் படமாட்டாது.

[வாரப்பதிப்பு.]

ஆசிரியர்

ஈ. வெ. இராமசாமி நாயக்கர்.

ஈரோட்டினின்று ஞாயிறு தோறும் வெளி வருவது.

**விளம்பர விகிதம்.**

| | ரூ. அ |
|---|---|
| கலம் ஒன்றுக்கு வாரம் ஒன்றுக்கு | 5—0 |
| சில்லரை விளம்பரம் அங்குலம் 1க்கு | 0—8 |

நீடித்த கால விளம்பரம் செய்வோருக்கும், பெரிய விளம்பரம் செய்வோருக்கும், பிரத்தியேக விகிதம்.

முன் பணமின்றி விளம்பரம் பிரசுரிக்கப் படமாட்டாது.

பிறப் பொக்கு மெல்லாவுயிர்க்குஞ் சிறப்பொவ்வா
செய் தொழில் வேற்றுமையான்—குறள்.

ஒழுக்க முடைமை குடிமை யிழுக்க
மிழிந்த பிறப்பாய் விடும்—குறள்.

மாலை க | குரோதன-ஞு தை-மீ கக-உ (24—1—26) ஞாயிற்றுக்கிழமை | மலர் உ.அ



மகாத்மா காந்திக்கு ஜே!

வந்தேமாதரம்! அல்லாஹூ அக்பர்!!

## திருப்பூர் சுத்த கத்தர் ஜவுளிகள்.

தமிழ்நாடு கதர் போர்டாரால் அத்தாட்சிப்பத்திரம் பெற்ற எங்கள் டிப்போவில் பல ரகம் வேஷ்டிகள், துண்டுகள், வெள்ளைப் பீசுகள், ஷர்டிங், கோட்டிங், சீட்டி தினுசுகள், தாவணிகள், சுங்கடிச்சேலைகள், சால்வைகள், அச்சு வேஷ்டிகள் கிடைக்கும். தேவைக்கு ஆர்டர் செய்யுங்கள். பிரதி ஆர்டருடன் 100க்கு 25 ரூ. வீதம் அட்வான்சு அனுப்பவேண்டும். வி. பி. அனுப்ப முடியாத வெளிநாட்டு ஆர்டர்களுக்கு பூராத்தொகையும் முன் பணமாக அனுப்ப வேண்டும்.

ஆர். டி. முத்துசாமி செட்டியார்,
கத்தர் டிப்போ, திருப்பூர், (தென் இந்தியா.)

## காங்கிரஸ் அத்தாட்சி பெற்ற சுத்த கதர்!

தமிழ் நாடு காங்கிரஸ் கதர் போர்டின் விலைக்கே விற்கப்படும். எல்லா ரகங்களும் கிடைக்கும். விலை ஜாபிதாவுக்கும் மற்ற விபரங்களுக்கும் கீழ்கண்ட விலாசத்துக்கு எழுதவும். சாம்பிள் (மாதிரி)க்கு 4 அணா ஸ்டாம்பு அனுப்பவும்.

கற்பக விநாயகர் கதர் நிலயம்,
ஊத்துக்குளி. (S. I. R.)

## திருப்பூர் சுத்த கத்தர் ஜவுளிகள்.

பலரகம் வேஷ்டிகள், துண்டுகள், வெள்ளை பீஸ் ரகங்கள், ஷர்ட்டிங், கோட்டிங், சீட்டி தினுசுகள், தாவணிகள், சுங்கடி சேலைகள் இன்னும் அநேக தினுசுகள் எங்களிடத்தில் கிடைக்கும். தேவைக்கு உடனே ஆர்டர் செய்யுங்கள், ஆர்டர்கள் 100-க்கு 25 ரூபாய் வீதம் அட்வான்ஸ் அனுப்பவேண்டும். வி. பி. அனுப்பமுடியாத வெளிநாடுகளுக்கு பூராத்தொகையையும் முன் பணமாகவே அனுப்பவேண்டும்.

(அத்தாட்சி பத்திரம்) தமிழ் நாடு காங்கிரஸ் கமிட்டி.

ஸ்ரீமான் என். கே. சங்கரப்ப செட்டியார் கைநூல் கைத்தரியால் தயார் செய்யப்பட்ட சுத்த கத்தர் துணிகளையே உற்பத்திசெய்து நியாயமான விலைக்குவிற்று வருகிறார்.

(ஒப்பம்) வா. மூ. தங்கப்பெருமாள்
காரியதரிசி, கத்தர் இலாகா.

விலாசம்:—
என். கே. சங்கரப்ப செட்டியார், கத்தர் ஸ்டோர்,
திருப்பூர், (தென் இந்தியா.

## திருப்பூர் சுத்த கத்தர் ஜவுளிகள்

பல ரகம்வேஸ்டிகள், துண்டுகள், வெள்ளை பீஸ் ரகங்கள், ஷர்ட்டிங், கோட்டிங், சீட்டி தினுசுகள், தாவணிகள், சுங்கடி சேலைகள் இன்னும் அநேக தினுசுகள் எங்களிடத்தில் கிடைக்கும். தேவைக்கு ஆர்டர் செய்யுங்கள். வி. பி. அனுப்பமுடியாத வெளிநாடுகளுக்கு பூராத்தொகையையும் முன்பணமாக அனுப்பவேண்டும்.

(அத்தாட்சி பத்திரம்.)

ஸ்ரீமான் ஆர். எம். எஸ். சிதம்பரம் செட்டியார் முத்துசாமி செட்டியார் கைநூலால் கைத்தரியால் தயார் செய்யப்பட்ட சுத்த கத்தர் துணிகளையே உற்பத்தி செய்து நியாயமான விலைக்குவிற்றுவருகிறார்.

(ஒப்பம்) வா. மூ. தங்கப்பெருமாள் காரியதரிசி கத்தர் இலாகா

விலாசம்:—
ஆர். எம். எஸ். சிதம்பரம் செட்டியார், முத்துசாமி செட்டியார்,
கத்தர் டிப்போ, திருப்பூர், (தென் இந்தியா)

# சென்னை எம். அண்டு எஸ். எம். ரெயில்வே தொழிலாளர் முதல் மகாநாடு.

இம்மாதம் 4-ந் தேதியன்று சென்னை எம். அண்டு எஸ். எம் ரெயில்வே தொழிலாளரின் முதல் மகாநாடு ஸ்ரீமான். ஜோஷியின் தலைமையில் நடைபெற்றது. அவ்வமயம், ஸ்ரீமான்கள். வி. வி. கிரி. செல்வபதி செட்டியார், முகுந்தலால் சர்க்கார் திரு. வி. கலியாண சுந்தர முதலியார், சர்க்கரைச்செட்டியார், எர்னஸ்டுகிர்க், கிரஹம்பேல் முதலிய பல கனவான்களும் விஜயம் செய்திருந்தனர். வரவேற்பு கமிட்டித்தலைவர் ஸ்ரீமான். பஞ்சாட்சர ஆச்சாரியார், தனது வரவேற்புப் பிரசங்கத்தை வாசித்தபின், மகாநாட்டு அக்கிராசனர் அக்கிராசனப் பிரசங்கம்செய்தார். பின்னர் கீழ்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன:—

## தீர்மானங்கள்.

### அங்கீகாரம்

1. இச்சங்கத்தைக் கம்பெனியார் தாமதமின்றி அங்கீகரிக்க வேண்டுமென்று ஏஜண்டு, ஹோம்போர்டு, ரயில்வேபோர்டு இவர்களை இம்மகாநாடு கேட்டுக்கொள்கிறது. இதை, அங்கீகரித்து, அதன் கிளைகள் பற்பல விடங்களில் ஏற்படுத்தக் கூடுமான உதவிபுரிந்து இச்சங்கம் அபிவிருத்தியடையவேண்டிய ஆதரவளித்து, தொழிலாளரின் பற்பல பிரத்தியேகக் குறைகளை இச்சங்க மூலமாக விசாரித்து நிவர்த்தி செய்ய வேண்டும் என இம்மகாநாடு கேட்டுக் கொள்கிறது.

### சம்பள நிர்ணயம்

2. காலக் கிரயத்தையும், ரயில்வே உத்தியோகத்தில் ஏற்பட்டுள்ள தொந்தரவுகளையும், பொருப்பையும் உத்தேசித்து, ரயில்வே உத்தியோகத்தில் உள்ள சிப்பந்திகளுக்குக் கீழ்வரும் குறைந்த சம்பளமேனும் கொடுக்கப்பட வேண்டுமென்று இம்மகாநாடு அபிப்ராயப்படுகிறது. அதாவது, தொழில் அநுபவமில்லாதவர்களுக்குத் தலை நகரில் ஒவ்வொருவருக்கும் மாதம் ஒன்றுக்கு ரூ. 40. மற்றப்பட்டணங்களில் ரூ. 35. சிறு ஊர்களில் ரூ. 30. தொழிலில் தேர்ச்சி பெற்றவருக்கு ரூ.60. இவர்கள் எல்லாருக்கும் வருஷா வருஷம் ஒரு நிதானத்தின்மேல் சம்பளம் உயர்த்தப்படவேண்டும்.

3. ரயில்வே இலாகாக்களில் உள்ள பற்பல வேலைக்காரருக்கும் கொடுக்கப்பட்டுவரும் சம்பள விகிதத்தை மாற்றி, யாவரும் விரைவில் உயர் பதவியடைந்து பெருஞ் சம்பளம் பெறக்கூடிய திட்டம் ஒன்று அமைக்கவேண்டுமென்று இம்மகாநாடு வற்புறுத்துகிறது.

4. ரயில்வே கம்பெனியில் ஒரு வருடத்திற்குமேல் வேலை செய்தவரும் அனைவருக்கும் வருடம் ஒன்றுக்கு ஒரு மாதச் சம்பளம் வீதம் (கிராட்யுட்டி) உபகாரச்சம்பளம் கொடுக்கப்படவேண்டுமென்று இம்மகா நாடு தீர்மானிக்கிறது.

5. இப்பொழுதேற்பட்டிருக்கும் பிராவிடண்டு நிதி, போனஸ், உபகாரச் சம்பளநிதி யாவும் தொழிலாளர்கள் உழைப்பினால் பெற்ற பணமாகக் கருதப்படவேண்டுமேயன்றி, அவை தயவாகவோ தாட்சணியமாகவோ கருதப்படுதல் கூடாது. அத்தகைய நிதியிலிருந்து, வேலை கிறுத்தமுட்பட எக்காரணத்தை முன்னிட்டும் பணத்தைப் பிடிப்பதற்கு அதிகாரமில்லையென்றும் அரசாங்கத்தாருக்கும், ரயில்வே அதிகாரிகளுக்கும் இம்மகா நாடு தெரிவித்துக்கொள்ளுகிறது.

6. மாதச்சம்ளம் வாங்குவோருக்கும், தினசரி குறிப்பிட்டுள்ள காலத்திற்குமேல் அதிக நேரம்வேலை செய்தால் அதற்கேற்ற அதிகச் சம்பளம் கொடுக்கப்பட வேண்டும்.

7 எந்த தொழிலாளியும் மாதம் 144 மணிநேரத்திற்கு மேல்வேலைசெய்யக்கூடாதென்று இம்மகாநாடு அபிப்ராயப்படுகிறது. அதிகநேர வேலை செய்பவருக்குப் பிரத்தியேகச்சம்பளம் கொடுக்கவேண்டும். மணி குறிக்கும் தொழிலாளர்களுக்கும் வேலை வாங்கும்தொழிலாளர்களுக்கும் ஒவ்வொரு நாளும் 6-மணிக்குமேல் செய்யும்வேலைக்கு அதிகச்சம்பளம் கொடுக்கப்படவேண்டும்.

8. அச்சுக் கோக்கும் இலாகாவில் வேலை செய்யும் அளவிற்குத் தக்கவாறும் மணிக்குத் தக்கவாறும், சம்பளம் கொடுக்கப்படுவதையும், மிஷின், ஆடிட், பைண்டிங் முதலிய இலாகாகளில் மணிக்கேற்றவாறு சம்பளம் கொடுக்கப்படுவதையும் இம்மகா நாடு அங்கீகரிக்கவில்லை. ஆகையினால், இம்முறையை ஒழித்து, அச்சுக்கூடங்களில் எல்லா இலாகாக்களிலும் மாதச்சம்பளம் கொடுக்குமாறு இம்மகா நாடு வற்புறுத்துகிறது.

9. கம்பெனிகளில் வேலை செய்கையில் தேக அசௌகரியங்கள் முதலியன உண்டானால் அவை இலகுவடையும் வரை ஒவ்வொரு தொழிலாளருக்கும் முழுச் சம்பளம் கொடுக்கப்பட வேண்டுமென்று இம்மகாநாடு அபிப்ராயப்படுகிறது.

10. இந்தக்கம்பெனியில் வேலை செய்யும் ஒவ்வொரு என்ஜின் ஓட்டிக்கும், கரி தள்ளுபவருக்கும், ஆக்வாலர்க்கும் தென்னிந்திய ரயில்வேயில் கொடுபடுவது போல் சம்பளம் கொடுக்கப்படவேண்டும். அன்றியும் இவர்களுக்கு வருஷத்திற்கு 60 நாட்கள் அவசியமான காலங்களில் ஸிக்குலீவும், சகஜமாயுள்ள ரஜாவும் கொடுக்கப்படவேண்டும். இவற்றினால் உத்தியோக உயர்வும் சம்பள உயர்வும் தடையுறலாகாது.

### ரஜாவும், வேலைநேரமும்

11. தொழிலாளர்கள் வாரத்திற்கு 48-மணி நேரந்தான் வேலை செய்யலாமென்றும், வாரத்திற்கொருநாள் அவர்களுக்கு விடுமுறை யளிக்கப்பட வேண்டுமென்றும் இந்தியா அரசாங்கம் சட்டமியற்றுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

12. ஸிக்னல், ரன்னிங்செட், பவர்ஹவுஸ் முதலிய விடத்து வேலைகளைச்செய்வோருக்கு அவசர அவசியம் ஏற்பட்டால் ரஜா அளிக்க வேண்டுமென்று ஏஜண்டை இம்மகாநாடு கேட்டுக்கொள்கிறது.

13. ரஜா, விடுமுறை, பிராவிடண்டு நிதி, பாஸ்முதலிய விஷயமாக, மாதச்சம்பளம் பெறும் சிப்பந்திகளுக்குள்ள பாத்தியங்கள் அனைத்தும் தினசரிச்சம்பளம் பெறுவோருக்கு மிருக்கவேண்டும்.

### சட்டசபைப் பிரதிநிதித்துவம்

14; மாகாண சட்டசபைகளுக்கும், டில்லி சட்டசபைக்கும் ரயில்வே சிப்பந்திகள் தங்களுடைய பிரதிநிதிகளைத் தெரிந்தெடுக்கும் பாத்யம் அளிக்கப்படவேண்டும். ரயில்வே இலாக்காக்களும், தொழிலாளர்களும் ஏராளமாக விருக்கிறபடியால், அவர்களுடைய பற்பல குறைகளை எடுத்துக்கூற ஒரு பிரதிநிதி போதாதென்று இம்மகாநாடு அறிவித்துக் கொள்கிறது

### ஜாதிவேற்றுமை

15. இந்தியா அரசாங்கம் அடிக்கடி ஜாதி பேதம் பாராட்டுவதில்லை என்ற, சொல்லிக் கொள்ளினும், ஜாதி பேதம் பாராட்டுவது ஒழியவில்லையென்றும், உத்தியோக நியமனம், ரஜா வாசகூசதி, சம்பளம் முதலிய விஷயமாகக் கீழ்த்தர வேலைகளிலும் இந்தியருக்கு உயர் பதவி திருப்திகரமாக அளிக்கப்பட வில்லையென்றும், எம், எஸ். எம். ரயில்வே அதிகாரிகளிடம் சொல்லி அரசாங்கத்தார் இந்த வித்தியாசங்களை நீக்க வேண்டுமென்றும் இம்மகாநாடு வற்புறுத்துகிறது

16 ஐரோப்பிய ஆங்கிலேயத் தொழிலாளர்களின் நன்மைக்காக ஏற்பட்டிருப்பதைப் போல், அபிவிருத்தி சங்கங்களும், களிப்பாறும் சங்கங்களும் இந்தியத்தொழிலாளர்களின் நன்மைக்காகவும் ஏற்படுத்தவேண்டும். இருதரப்பிரானுடைய குழந்தைகளின் வேடிக்கை விளையாட்டுகளுக்காக வருடா வருடம் கொடுக்கப்பட்டுவரும் தொகையை அந்தந்த சங்கத்தினரிடம் கொடுத்துவர வேண்டுமேயன்றிச் சில்லரை உத்தியோகஸ்தரைக் கொண்டு அவற்றைச் செலவிடச்செய்வது கூடாது. ;இவ்விதமாகக் கொடுக்கப்படும் தொகை எந்த வகுப்பினர் குழந்தைகள் அதிகமாக விருக்கின்றனவோ அந்த வகுப்பிற்கு அதிகமாகவும் குறைவாயுள்ள வகுப்பினர்குழந்தைகளின் செலவிற்குக் குறைவும் கொடுக்கப்படவேண்டும்.

17. ஆங்கிலோ இந்தியக் குழந்தைகள் உபயோகத்திற்கேற்பட்டிருப்பதுபோல் எல்லாவித ரயில்வே அமைப்புகளிலும் இந்தியக் குழந்தைகளுக்காகவும் பள்ளிக்கூடங்கள் ஏற்படுத்தப்படவேண்டும். [இத்

(தொடர்ச்சி 11-ம் பக்கம் பார்க்க.)

# குடியரசின் வளர்ச்சி.

(திருப்பதி எழுதுகிறார்,]

எந்த ஒரு முன்னேற்றமடைந்த தேச சரித்திரத்தைப் பார்த்தாலும், அது தேசாபிமான கல்விமூலமாய்த்தான் முன்னேற்றமடைந்திருக்கு மென்பது புலப்படும். அக்கல்வியின் பலனைக் கிடைத்த அறிவு முயர்ச்சிக்கு பத்திரிக்கைகளும் ஒரு அம்சமாகும். நமது தமிழ் நாட்டில் மூலை முடுக்குகளிலிருக்கிற பாமர ஜனங்களைக்கூட தட்டி எழுப்பி உணர்ச்சியுண்டாக்கிவைத்தது மகாத்மா போன்றவர்களின் பத்திரிக்கைகளேயாகும். நமதுநாட்டின் தேவைக்கு இவைகள் போதாது. இனியும் அவைபோன்ற பல பத்திரிக்கைகள் தேவை இதை முன்னிட்டே ஈரோட்டினின்றும் சில மாதங்களுக்கு முன்னால் வாரப்பத்திரிக்கையாகிய, "குடி அரசு" என்ற பெயருடன் ஒரு சிறந்த தேசியப்பத்திரிக்கை தமிழ் நாட்டில் தொண்டு செய்ய வந்துளது. அதின் ஆசிரியர், பழுத்த தேசாபிமானி; தேசத்திற்காக மும்முறை சிறை சென்றவர்; அவசியம் ஏற்பட்டால் இனியும் பன்முறை சிறை செல்லப் பின்வாங்காதவர்; விரிக்கிற் பெருகும். அப்பெரியாரை ஆசிரியராகக் கொண்ட "குடி அரசை" ஒவ்வொரு தமிழ் மகனும் ஆதரிக்கக் கடமைப்பட்டுள்ளான். இப்படியிருந்தும் இப்பத்திரிக்கை பிறந்து ஆண்டுநிறைவின்னும் ஆகாமல் சில மாதங்களிலேயே ஆயிரத்து ஐநூருக்கு மேற்பட்ட சந்தாதாரர்சேர்ந்திருப்பது சந்தோஷிக்கக் கூடியதானாலும், இதன் வளர்ச்சியானது நாட்டின் முன்னேற்றத்திற்கும், அறிவு முயற்சிக்கும், இத்தொகை மிகச்சொற்பம். ஆயினும் இதன் வளர்ச்சிக்கு தடையாயிராமலிருப்பது பெரிய உபகாரமென்று சொல்வதற்குக்கூட அவசியமேற்பட்டிருப்பதைப்பற்றி வருந்தவேண்டி யிருக்கிறது. சென்ற வாரம் "குடியரசி"ல், யாரோ சில சந்தாதார்கள், பத்திரிக்கையின் போக்குப்பிடிக்கவில்லையென்று சொல்லிவிட்டார்களாம்; இரண்டொருவர், திருப்பியனுப்பியும் விட்டார்களாம். தவிர சில பத்திரிகைகள் "குடியரசு."விஷயமாய், சாதகமோ, பாதகமோ, எது எழுதினாலும் பிரசுரிப்பதில்லை. ஏன் பிரசுரித்துப் பத்திரிக்கைக்கு அந்தஸ்துத் தேடிக்கொடுக்க வேண்டுமென்ற எண்ணம் போலும். இன்னும் சிலர் பிரசங்க மாரியில்கூட ஒருவிஷயம் உதாரணம் காட்ட வரும்போது, ஒரு வாரப்பத்திரிக்கை எழுதுகிறது என்பார்களே தவிர "குடியரசு" என்று சொல்லப்பயப்படுகிறார்கள். அதோடுசில்லரை ஆள்களைவிட்டுவிஷமப் பிரசாரமும் செய்கிறார்கள். இத்தனை இன்னல்களையும் தப்பித்து "குடி அரசு" வளரவேண்டியிருக்கிறது. ஆனால் இதுகளெல்லாம் சூரியனைக் கையைக்கொண்டு மறைத்து விடுவதை யொக்கும். முளைப்பாரைப் புதைப்பாருமுண்டோ? ஆனால் இவர்கள்தான் மெயில்வண்டி வந்தும் ஹிக்கின்பாதம் புத்தகசாலையில் முதலாவதாகக் குடியரசுப்பத்திரிக்கை வாங்குகிறவர்கள். தங்களைப்பற்றியும், தங்களுக்கு மாறுபட்டவர்களைப்பற்றியும் என்ன பாணந்தொடுத்திருக்கிறதோ என்ற எண்ணம் இவர்களைத் தாமதிக்க விடுவதில்லை.

நான் ஆருத்ராவுக்கு சிதம்பரம் போயிருந்தேன். அங்கு ஓர் பெரிய கூட்டத்தில், இப்பத்திரிக்கையை வெறுக்கிற ஒரு கும்பகோணம் பிராமண கனவான் அந்த வாரத்திய பத்திரிக்கையை அழுத்தந் திருத்தமாகச் சபையோர்களுக்கு ஆத்திரத்துடன் இரண்டு மூன்று முறை படித்து விளக்கினார். அங்கிருந்த இரண்டொருவர் நீங்கலாக மற்றையோர், இப்பத்திரிக்கைதான் உண்மையாய்ப் பாடுபடுகிறது என்றும் ஒவ்வொருவரும் படிக்கவேண்டுமென்றும் பேசிக்கொண்டதோடு-சிலர் "குடி-அரசு"க்கு சந்தாதாரரானார்கள். ஆகையால், இப்படிச்செய்யாமல் செய்தவுதவிக்கு அந்த நண்பருக்கு வந்தனம் செய்யவேண்டும். இதைப்பற்றி ஒரு சிறு கதை:— ஒரு வீட்டில் புருஷனும் மாமன்—மாமியும் இல்லாதபோது (நாட்டுப் பெண்) மருமகள் அடுத்த வீட்டுக்காரனுடன் ஏதோ பேசிக்கொண்டிருக்கும்போது, வாசலில் கட்டியிருந்த எருமை எதற்கோ தலையாட்டியது. உடனே பெண் எருமையிடம்போய் இந்தவிஷயத்தை வெளியில் சொல்லாமல் மன்னிக்கும்படி கேட்டுக்கொண்டாள். ஒரு காலையும் பிடித்துக்கொண்டாள். அதற்கு உபத்திரவம் ஏற்பட்டபடியால் அதிகம்தலையாட்டிற்று. இதற்குள் புருஷன் வரவே தானே முந்திச்சொல்லி எருமையின் அடாதசெய்கையை விளக்கினாள். புருஷனும் வெளியாரிடம் சொல்லாமலிருக்கும் பொருட்டு, மிகவும் பரிந்து கேட்டுக்கொண்டு தானும் ஒரு காலைப்பிடித்துக் கொண்டான். இதற்குள் மாமன் மாமியும் வந்து சேர்ந்து விஷயத்தை மருமகளால் தெரிந்து மன்னிப்புக்காக இவர்களும் மற்ற இரண்டுகாலையும், பிடிக்கவே, எருமை பயந்து கால்களை உதறிக்கொண்டு ஓட்டமெடுத்தது. இவர்கள் ஓ, ஓ, மோசம்வந்து விட்டதென்று, உடனே, தோட்டியிடம்போய் அவசர காரியமானபடியால் ஒன்றிற்கு இரண்டாகக் கூலிகொடுத்து ஒரு தண்டோரா [டாம் டாம்) போட்டார்கள். அதாவது,— எங்கள் நாட்டுப்பெண் அயல் வீட்டானிடம் பேசியதாக எருமை சொல்வதை யாரும் நம்பாதீர்கள் என்று சொல்லச்சொன்னார்கள். இது போல்தான் இந்த விஷயமும். நிற்க, பத்திரிக்கையின் பெயரைச் சொல்லப் பயப்படுபவர்களுக்கும் ஒரு உதாரணமுண்டு ஸ்ரீரங்கமும், திருவானைக்காவும் ஒரே முனிசிபாலிட்டியைச் சேர்ந்தது. ஸ்ரீரங்கம்போனவர்கள் யாராவது தெரியாமல் திருவானைக்காவிற்கு வழியெது என்று கேட்டால், இப்போது புதிதாகப் பாகவதர் ஆயிருக்கிற, பிராமணரல்லாத ஆள்வாராதிகள் எங்களுக்குத்தெரியாதென்றாவது அல்லது அவ்வழியையே காட்டி, இதுதானோ என்னமோ என்று இரண்டொருவர் சொல்வதுண்டு. இப்படி யிவர்கள் சொல்லிவிட்டால் சைவசமயமே மறைந்துபோகுமென்றாவது, அல்லது ஸ்ரீரங்கநாதன் இவர்கள் பால் அன்பு வைத்து தனது சேஷ சயனத்தை இவர்களுக்குக் கொடுத்து விடுவார் என்றாவது, நினைப்பது போலவே, இவர்கள் கூற்றும் இருக்கிறது. இவ்வளவு இடையூறும், குடி அரசு, ஆசிரியர் நேர்மை வழியால் வந்தது. "எதார்த்தவாதி வெகு ஜன விரோதி" இன்றைக்குக் குறுக்குவழியில் திரும்பினால் கூட அதை சிலர் வாழ்த்தும் ஒலி வானுட்டும். ஸ்ரீகிருஷ்ண பரமாத்மாவை சிசுவிலேயே கொன்றுவிட கம்ஸன் எவ்வளவோ முயற்சிசெய்தும் முடியவில்லை. ஏனெனில் அவரால் சத்தியம்நிற்கவேண்டும் துஷ்ட நிக்ரக சிஷ்டபரிபாலனம் நடக்க வேண்டும்; பாரதப் போர் ஏற்பட வேண்டும்; இது தெய்வ எத்தனம், மனிதன் தடுக்க முடியுமா? அதுபோல் சத்தியத்தைச் சோதிக்க பல இடையூறுகள் வரும் என்பது பெரியோர்கள் வாக்கு. அதையே தான் அதின் ஆசிரியரும் சொல்லுகிறார். அதாவது இப்பத்திரிக்கையாதொரு லாபத்தையும் எதிர்பார்த்து ஆரம்பிக்கவில்லை, மனச் சாக்ஷிப்படி சத்தியமாய் நடந்து உண்மையை வெளியிடுவதே இதன் கொள்கை;இதனால் இப்பத்திரிக்கை மறைவதாயிருந்தாலும் சொல்வதொன்று, செய்கை மற்றொன்றாயிருந்து ஜனங்களை ஏமாற்றி, பின்னால் சித்ர புத்ரனுக்கு ஜவாப்பு சொல்ல ஒருப்படேன் என்று தீர்மானித்துக்கொண்டு, சத்தியத்திற்கு உண்மை யுண்டா இல்லையா? என்றறிவதே தனது நோக்கமென்று, தமக்கு முகநட்பாளராக இருந்த பலர் எதிர்ப்பிரசாரம் செய்யவும், அகநட்பாக இருந்த சிலர் திரிசங்கு ஸ்தானத்திலிருக்கவும், எப்படி ஒற்றைத்தேருடன் கோதண்டம் என்ற ஒரே வில்லை தாங்கி சமுத்திரம் போன்ற மூல பல ராக்ஷதர் முன்னிலையில் ஸ்ரீராமபிரான் பிரவேசத்தாரோ, அப்படியே நமது தலைவர் ஈரோடு ஸ்ரீமான். ஈ. வெ. ராமசாமி நாயக்கரும் "குடியரசு" என்ற அம்புடன்,ஒருவருடைய துணையுமின்றி ஏகனாயகனுகக்கிளம்பியிருக்கிறார். அவருக்கு வெற்றி நிச்சயம் எப்படியெனில் துரௌபதியின் துகிலுரியும் போது, தனது கணவன்களையும், கைமுதலிய அவயவாதிகளையும்நம்பியிருக்கிறவரையிலும் தனக்குத் துன்பம் அதிகரித்து வந்தது. கடைசியாக இவர்களை நம்பிப் பிரயோஜனமில்லை யென்று தெரிந்து இரண்டு கரங்களையும் சிரசில் கூப்பி ஏ. கண்ணா! என்னைக் காப்பது நினது கடன். என்றவுடன் தீதிர்க்கதியானவரைக் காப்பது ஆண்டவன் கடன் என்று பகவான் அருள்புரிந்தார். அதுபோலவே இனிமேல் தான் ஸ்ரீமான். நாயக்கர் வெற்றிமாலை சூடப்போகிறார். ஸ்ரீமான். நாயக்கர் சுயராஜ்யக் கக்ஷி தோன்றிய காலமுதலே அக்கக்ஷியையும் அதற்கு மூலகாரணமாயிருந்த தலைவர்களையும் பிராமணர்—பிராமணரல்லாதார் என்ற வேற்றுமையின்றி தாக்கி வருகிறார். அதற்காக எப்படி

(தொடர்ச்சி 9-ம் பக்கம் பார்க்க.)

## கோவிற்பட்டிப் பத்தி விளைகழகம் இருபத்தோராவதாண்டு நிறைவு விழா.

24–12–25.

சென்னை சட்ட கலாசாலை ஆசிரியர் அட்வோகேட் மறைத்திருவன் கா. சுப்பிரமணிய பிள்ளையவர்கள், எம். ஏ.எம். எல். தலைமையில் நடைபெற்றது.

மறைத்திரு சுந்தர ஓதுவாமூர்த்திகள் தமிழ் மறை பாடினார்கள். யோகிகள் தலைவரவர்களுக்கு, வரவேற்புத்தாள் படித்துத் தந்தார்கள்.

தலைவர் பிள்ளையவர்கள், தமது முன்னுரையில், தமிழர், ஆரியர் இந்நாட்டுக்கு வருமுன்னரே, மொழி நூல்களும் சைவ சமயமும் ஒழுக்கமுடையரா யிருந்தனர். தமிழர் சிவலிங்க வழிபாடுடையராயிருந்தனரென்பது, இருக்கு வேதத்திற் குறிக்கப்படுகின்றன. ஆரியர் சமயமும், ஒழுக்கமும் வேறு. தமிழர் சமயமும், ஒழுக்கமும் வேறு. தமிழர் நான்மறைகளும் ஆகமங்களும் கடல் கோளிற்பட்டு மறைந்துபோனாலும், இப்போதுள்ள போதமும் ஏனைய மெய்கண்ட நூல்களும் திருமந்திரமும் தேவார திருவாசகங்களும்,பெரிய புராணமும், திருக்குறளும், சித்தர் நூல்களும், வேண்டும் பொருள்களை அறிந்துய்யப் போதுமானவைகளாயிருக்கின்றன. என்று மேற்கோள்களோடு விளங்கச் சொன்மாரி பொழிந்தனர்.

பின்னர் திருமங்கலம் திரு. மீனாட்சி சுந்தர முதலியாரவர்கள், பி. ஏ. பி எல். திருமூல நாயனார் புராணத்தைத் துணையாய்க் கொண்டு, உலகிலுள்ள எல்லா மதங்களுக்கும் பொதுவாயுள்ள உயர் ஞான நெறி சைவ சமயம் என்ற உண்மையை, நன்கு விரித்து உரைத்தனர். திருமூலநாயனார் திருமந்திரத்தினின்று, பல மேற்கோள்களையும், எடுத்துக் கூறி அனைவரையும் மகிழ்வித்தனர்.

பின்னர், திருக்குறளவதானியார் திருவன். சுப்பிரமணியதாசரவர்கள் "கொல்லாமை" என்ற பொருள்பற்றி அரியதோர் பெருஞ் சொல்லியற்றினர். அதன் பின் மூடுக்குமீண்டான் பட்டி, திரு. சுப்பிரமணிய தேவரவர்கள். "பொறையுடைமை" என்ற பொருள் பற்றிக் கலப்பற்ற தமிழ் தூயமொழியில் பிரசங்கமியற்றினர். தலைவரவர்கள் முடிவுரை கூறி முடித்தனர்.

வி. சிவஞான யோகி
கழகத்தலைவர்.

---

25—12—25 நிகழ்ச்சி.

கோவிற்பட்டி திராவிடர் கழகம் பதினேழாவதாண்டு நிறைவுவிழா.

சென்னை, அட்வோகேட், மறைத்திருவன், கா. சுப்பிரமணியபிள்ளையவர்கள். எம். ஏ. எம். எல். தலைமையில் நடைபெற்றது.

திருவன். வ. உ. சிதம்பரம்பிள்ளையவர்கள் "அறத்துப்பால்" என்ற பொருள் பற்றியும், திரு. பு. இ. புன்னைவனநாத முதலியாரவர்கள், "மெய்யுணர்தல்" என்ற பொருள்பற்றியும், திரு. இ. மு. சுப்பிரமணிய பிள்ளையவர்கள் "ஒளிநூல்" (சோதிடம்) என்ற பொருள்பற்றியும் அவையினர் மகிழுமாறு பிரசங்கித்தனர்.

பின்னர். சாமி, விருதை, சிவஞான யோகிகள் "வஜ்ரசூசி கோப நிஷதம்," (வைர ஊசி அருகணி), வடமொழியிற் படித்துப் பதவுரைகூறி, அதைத்தமிழில் எண்பத்தொன்பதடி அகவற்பாவாக மொழிபெயர்த்துக் கூறிப்பிராமணன் (அந்தணன்) உயிர் அன்று, உடலன்று, குலமன்று, ஞானமன்று, கருமமன்று, தருமவானன்று சருவாந்தரியாம் பரமான்மாவை நேரிற் கண்டு, தீயகுணமற்று, நற்குண நல்லொழுக்கமுற்ற உடைய பிரமானுபவமுடைய ஞானியே பிராமணன் என்பதன்கருத்து என்று கூறிமுடித்தனர். தலைவர் முடிவுரை கூறி முடித்தார்கள். அறிஞர் பலர் பலதீர்மானங்கள் கொண்டுவந்து நிறைவேற்றினர். முடிவில் தலைவரவர்களுக்கும் பெருஞ்சொலாளர்க்கும் பூமாலைகள் சூட்டி சந்தனம் அடைகாய் வழங்கப்பட்டன.

வி. சிவஞானயோகி
கழகத்தலைவர்

---

## வயிர் ஊசியருகணி

சமஸ்கிருதபாஷையிலிருக்கிற, சாமவேதத்தைச்சேர்ந்த வஜ்ரசூசி கோப-நிஷத்து என்பதை, ஸ்ரீலஸ்ரீ விருதை சிவஞானயோகிகள் தமிழில் மொழிபெயர்த்து வயிரஊசிஅருகணி என அகவலில் பாடியுள்ளார். அது வருமாறு:—

ஓம் அறியாமை யொழிக்கும் படையும்
அறிவிலர்க் கிழிவும் அறிவுக் கண்ணுடை
யவர்கட் கணியு மாகிய வயிர
ஊசி(ப்பனுவல்) உரைக்கா நின்றனன்.
வன்பிரா மணன்சத் திரியன் வைசியன்
சூத்திர னென்றினம் நான்கா மவற்றுட்
பார்ப்பான் முதல்வ னென்று வேத
உரையொத் தமிருதி களுமுரைக் கின்றன
அதிலெண் அந்தணன் உயிரா? உடலா?
குலமா? அறிவா? வினையா? அறத்தனா?
என்றவி னுக்க ளுளவா கின்றன

உயிர் = ஜீவன்

அவற்றுண் முதலாவ தாமுயிற் பார்ப்பான்
எனிலஃ றன்று சென்றதும் வருவதும்
ஆம்பல வுடலில் உயிரொரு வடிவா
யிருத்தலி னஃதொன் றுயினு மதற்கு
வினையாற் பலவுடல் விளைதலி னெல்லா
உடலினு முயிரொரு படித்தா யிருத்தலின்
அன்றுயிர் பார்ப்பா னங்ஙன மாகில்

உடல் = தேகம்

உடல் பார்ப்பானெனி லதுவு மன்று
புலையன் முதற்பார்ப் பான் வரை யுள்ள
மக்கட் கைம்பூத வடிவா முடலம்
ஒருவடி வாதலிற் நிரைசா வறம்மறம்
முன்னைய வொத்துக் காணப் படலின்
பார்ப்பான் வெண்ணிறம் வேந்தன்
செந்நிறம்
வணிகன் பொன்னிறம் வினைஞன் கருநிறம்
என்று நிலைத்த வற்பா டின்மையின்
தந்தை முதலியர் உடலைச் சுடலால்
செய்முன் னவர்க்குப் பெருங்கொலை
[முதலிய
மறமுண் டாத லின்மையி னுடலம்
அன்ற பிராமண னங்ஙன மாகில்

குலம் = சாதி.

குலம் பிராமண னெனிலற் றன்று
வேறு குலங்களிற் பலர்பிறந் தன்மையின்
அங்ஙனம் பலபெரு முனிவ ருளரால்
கலைக்கோட் டுமுனி கலைமா னின்றும்
கௌசிகன் றருப்பைப் புல்லி னின்றும்
சாம்பூ கன்னரி தன்னி னின்றும்
புகழ்வான் மீகன் புற்றி னின்றும்
வியாதன் செம்படத் தியின்பா னின்றும்
கௌதமன் முயலின் முதுகி னின்றும்
வசிட்ட னூர்வசி வயிற்றி னின்றும்
அகத்தியன் கலய மதனி னின்றும்
பிறந்தன ரென்று பேசப் படலின்
அவர்கட் குக்குலத் தானே யன்றியும்
முற்காலத் தறிவுணர்த்திய முனிவர்
பலருள ராதலிற் பிராமணன் குலமல

அறிவு = ஞானம்.

அங்ஙன மேலறிவு பார்ப்பா னென்னில்
அன்று சத்திரி யன்முன் னவரும்
மெய்ப்பொருள் காணும் மெய்யுணர் வின
பலருண்மை யினல அறிவு பிராமணன் [ராப்

வினை = கருமம்.

அங்ஙன மேல்வினை பார்ப்பா னெனில்ல
எல்லா வுயிர்க்குந் தய்வினை பொதுவினை
வரும்வினை யென்பன வொப்பக்காண்டலின்
மாக்கள் வினையாற் றுண்டம் பெற்றுச்
செயல்புரி கின்றன ரதனால் வினையும்
அன்று பிராமணன் அங்ஙன மாகில்

அறத்தான் = தருமவான்.

அறத்தான் பார்ப்பா னெனிலற் றன்று
வேந்தன் முதலியர் பொன்னளிப் பவராய்
பலருண் மையினல வறத்தினன் பார்ப்பான்

பிராமணன் = அந்தணன்.

அங்ஙன மாகிற் அந்தணன் யாவன்
இரண்டாவ திலது குலமும் பண்பும்
செயலு மில்ல தாதலை யாறியல்
முதலிய குற்ற மூற்று மற்ற
தன்மை யறிவின்ப வடிவ மாயது
தனக்கு வேறுபா டில்ல தெல்லா
ஊழி கட்கு நிலைக்கள மாய
தெல்லா வுயிர்க்கு முன்னின்ற யாய
துள்ளும் புறம்பும் விண்போற் பரந்த
திடையி லின்ப வியற்கை யுடைய
தளக்கப் படாதது துய்த்த லொன்றானே
அறியத் தக்கது கண்கூ டாக
விளங்கத் தக்க தாகிய வாவியை

கையுறி நெல்லிக் கனிபோ னேரிற்
கண்ட வுற்ற வினைமுற் றியவன்
காமம் விருப்ப முன்னைய குற்றம்

ஒழிந்தவ னடக்க முன்னைய வுடையன்
பொருமை வேட்கை யாசை,மயக்கம்
முதலிய வகன்றோன் பெருமை செருக்கு
முன்னைய மற்று முழுவறி வுடையவன்
ஆயுள னெவனவன் இங்ஙனஞ் சொலப்
படும்
இயல்புடை யவனே பிராமண னென்று
வேதம் மிருதி விரும்பும் புராணங்
களிதி காசங் களின கருத்தாமால்
பிறிதோர் வகையிற் பிராமணத்தன்மை
கிடைக்கவே மாட்டாது தன்னை யுண்மை
யறிவின்ப மாயிரண் டாவ தற்ற
பிரம மாக நினைப்பா னாக
தன்னை யுண்மை அறிவின்ப மான
பெரிய தாக நினைப்பா
னாக வென் பதுப நிடதம்மே

---

சென்னை டாகூர் லாலெக்சரர்

மறைத்திருவன்,

கா. சுப்பிரமணிய பிள்ளையவர்கள் எம். ஏ. எம். எல். தலைமையின் கீழ் நிகழ்ந்த திராவிடர் கழகப் பதினேழாவதாண்டுப் பேரவையில் நிறைவேறிய தீர்மானங்கள்:—

I தமிழ்ப்பல்கலைக் கழகம் விரைவில் அமையவேண்டும்.

II ஏற்படும் தமிழ்ப்பல்கலைக் கழகம் தமிழர்க்கு நன்மைவிளைப்பதற்கு தவியாக,

1. நாளது வரை அச்சியற்றப் பெறாத ஏட்டுநூல்களைத் தொகுத்து அச்சியற்றி வெளிப்படுத்தலுக்கும்,

2- தமிழ்மொழியில் காலத்துக் கேற்ற கலைகள் நிரம்புவதற்கு இன்றியமையாதவற்றை ஆங்கிலம் முதலிய பிற மொழிகளினின்றும் அவ்வம்மொழிப்புலவர்களைக் கொண்டு தமிழில் எழுதிவெளியிடலுக்கும் தனித்தனிக் கழகங்கள் ஏற்படவேண்டும்.

III தமிழ் மொழியில் வேண்டிய புலமைவாய்ந்திருக்கின்ற தமிழ் மக்களையே புதுத்தமிழ் பல்கலைக் கழகத்து ஆசிரியர்களாகவும் சொற்பொழிவாளர்களாகவும் அமைத்து ஊக்கவேண்டும்.

IV(1) நாட்டுப் பட்டத் தேர்வுகளில் ஒன்றாகிய தமிழ் வித்வான்(தமிழ்ப்புலவன்) தேர்வுக்கு உயர்தனிச்செம்மொழியும், உயர் மொழியுமாகிய தமிழ் மொழிநூற் புலமைசாலும் என்றமைக்க வேண்டும்.

2. இப்பட்டத்தேர்வு வகையில்மருத்துவம், ஒளிநூல் இலக்கணம்,சங்கநூல், காப்பியம், சைவசித்தாந்தம், வைணவசித்தாந்தங்களுக்குத்தனித்தனித்தேர்வு முறைகள் அமைத்துத்தனித்தனிப்பட்டம் வழங்க வேண்டும்.

துரைத்தனத்தாரால் சுமார் பன்னிரண்டு ஆண்டுகளுக்கு முன்தயாரித்து வெளிப்படுத்தமுயற்சி செய்யப்படுவதான தமிழகராதி ஷை வெளியீட்டுப் பொருப்புக்கழகத்தாரால் நாளது வரை வெளியிடாதிருப்பது வருந்தத்தக்கதாயிருப்பதால், அக்கழகஉறுப்பினர்களால் அதுவிரைவில் வெளிவரவேண்டுமென்று ஆர்வமுடைய தமிழ் புலவர் பலரைப்புகுத்தி விரைவில்வெளிப்படுத்த வேண்டும்.

V சிவ தேவஸ்தானக் கமிட்டியார் கோவிற் பட்டினம் செண்பகவல்லி பூவணநாதர் ஆலய விசாரிப்பு முறையில் இப்பொழுதேற்பட்டிருக்கும், குறைவுகளை விரைவில் நீக்கி நன்றாக நடை பெறச்செய்ய இக்கழகம் வேண்டுகின்றது.

VI சென்னை மாகாண அபிவிர்த்தி இலாகா மந்திரி மேன்மை தங்கிய தி. ரொ. சிவஞானம் பிள்ளை அவர்கள் தலைமையின் கீழ்க் கூடிய சிவாலயப் பணிவிடைச் சங்கப்பேரவையில்

(1) ஆலய பணிவிடைக்கு வேண்டிய கருவிகளை ஒவ்வோராலயத்தும், தயாரித்துவைக்கவும்,

(2) சமய நூல் கருகூலங்கள் நிலைபெறுவிக்கவும்,

(3) பட்டமார்களுக்கும், ஓதுவார்களுக்கும் பெரும் பயன் தரும் சைவ கலாசாலை ஏற்படுத்தவும், விரைவில் ஏற்பாடுகள் செய்யும்படிக்கு நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களை உடனே கவனித்து வேண்டுவன செய்யும்படி ஹிந்துமத அறநிலையப் போர்டாரையும் திருநெல்வேலி சிவ கமிட்டித் தலைவரையும், உறுப்பினர்களையும், இப்பேரவை வேண்டுகின்றது.

VII. சென்னை இலாகா அபிவிர்த்தி இலாகா மந்திரி மேன்மை தங்கிய சிவஞானம் பிள்ளையவர்கள் தலைமையின் கீழ்க் கூடிய பேரவையில் இக்கோவிற்பட்டி என்ற பெயரை கோவிற்பட்டினம் என்று மாற்றி அமைக்க வேண்டுமென்று நிறைவேற்றி அனுப்பிய தீர்மானத்தை வரும் உத்தியோக ஆண்டு முதலாகவாவது அமுலுக்குக் கொண்டு வரும்படி இப்பேரவையார் கவர்மெண்டாரை வேண்டுகின்றார்கள்.

VIII. பத்திவிளை கழகத்துக்கு திரு. கலியாணியம்மாள் தந்துதவியிருக்கிற இடத்தில், அடுத்த ஆண்டு நிறைவு விழாவுக்குள், கட்டிடம் கட்டிமுடித்துத் தந்து அடுத்த பேரவையை அதில் நிகழுமாறு செய்யும் படிக்கு இக்கழகத் தலைவர் இக்கழகத்தார் வேண்டிக்கொள்வதுடன், பெரியோர்களையும் இந்நன்னோக்கம் இனிதுநிறைவேறும்படிக்கு வேண்டும் உதவிகள் செய்யும்படி வேண்டிக்கொள்கின்றனர்.

IX. நம்நாட்டில் மூலாதாரர் கல்வி பயிற்றும் ஆசிரியர்களுக்கு அறிவு பெருகுவதற் கேற்பட்டுள்ள பாடசாலைகளில் உயரிய தமிழ்நூல்களைப் பாடமாக ஏற்படுத்தியிருப்பதற்கேற்ப தக்க இலக்கணப் பயிற்சியுடன் போதிக்கத்தமிழ்ப் பண்டிதர்களை போதனாமுறைப் பாடசாலைகளில நியமுகம் செய்யும்படி அதிகாரிகளையும் அரசாங்கத்தாரையும் இக்கழகம் வேண்டிக்கொள்கிறது.

X சைவசமயவளர்ச்சிக்குரிய சிவாலயங்களில் சௌரமான மாதங்களிலேயே விழாக்கள் நிகழ்த்தவேண்டியது முறையாதலால் இவ்வாண்டில் உத்தமமான சிவராத்திரி விரதத்தை மாசிமாதத்திலேயே செய்யும்படி இந்நாட்டிலுள்ள சிவாலயத் தர்மகர்த்தாக்களையும் மகாஜனங்களையும் இக்கழகம் வேண்டுகின்றது.


வி. சிவஞானயோகி.
கழகத்தலைவர்.

## கொடுமுடியில் பார்ப்பனர்களின் அக்கிரமம்.

### ஆற்றங்கரையிலும் துவேஷபுத்தி.

கொடுமுடி காவிரி ஆற்றங்கரையில் பொதுஜனங்கள் யாவரும் நின்று வேட்டி துவைத்து குளிப்பதற்காக பலபடித்துறைகள் இருக்கின்றன. இதில் கிழக்குத்திக்கிலுள்ளபடித்துறைகள் போக, மேற்குத் திக்கில் உள்ள ஒரு படித்துறையை, ஷை பார்ப்பனர்கள் தங்களுக்கென ஏற்படுத்திக்கொண்டு,வேறுயாரையும் அந்தஇடத்தில் குளிப்பதற்கு விடாமல், அக்கிரமம் செய்து கொண்டு வருவதோடு, இப்பொழுது ஆற்றங்கரை பூராவிலும் தங்கள் அதிகாரத்தையே செலுத்த முற்பட்டு விட்டார்கள். நாளது தை-மீ 1 உ கிரஹணத்தை முன்னிட்டு நானும், எனது நண்பர் பொங்கலூர் ஸ்ரீமான் குச்சமநாய்க்கரும்,ஷை காவிரிக்கரைக்கு குளிக்க சென்றிருந்தோம். படித்துறைகளில் கூட்டம் அதிகமாய் இருந்தபடியாலும் தண்ணீர் தேங்கி அழுக்கடைந்திருப்பதாலும், சற்று மேற்குதிசையில் சுத்தமான ஜலத்தில் குளித்துக் கொண்டிருந்தோம். அந்தஇடத்திலும் பார்ப்பனர்கள் ஆண்களும் பெண்களும் இருந்து கொண்டிருந்தார்கள். அவ்விடத்தில் தண்ணீர் கொஞ்சம் தேங்கி நின்றிருக்கிறபடியால், தண்ணீரில் கிரஹணம், பிடித்திருப்பதைப் பார்ப்பதற்கு சவுகரியமாய்இருந்தது. எல்லோரும் பார்த்து கொண்டிருந்தார்கள். நாங்களும் ஷை இடத்துக்குச்சென்றுபார்த்தோம், அதில் ஒரு பார்ப்பனர் நீங்கள் இந்த இடத்துக்கு வரக்கூடாது என்றார். இந்த இடத்தில் நாங்கள் நிற்பதை வேண்டாமென்று சொல்வதற்கு யாருக்கும் அதிகாரம் கிடையாது என்று சொல்லவே, அவரும் மற்றவர்களும், ஒன்றும் பேசாமல் ஏகமாக நின்று பார்த்துக்கொண்டிருந்தோம், கிரகணம் பிடித்ததும் குளித்துவிட்டு ஜெபம், செய்துகொண்டிருக்கிறேமென்று, சொல்லி ஏமாற்றி வருகிற இவர்கள், அவ்விடத்தில், ஊரிலிருக்கிற வீண விவகாரங்களையும், இரண்டொருவர் ஆங்கிலம் படித்தவர்கள் ஆங்கிலத்தில் வீண் காலக்ஷேபங்களையும், பெண்கள் அக்கம்பக்கம், வீட்டு சண்டை சச்சரவுகளையும், பேசிமுடித்தார்கள். கிரஹணம் விட்டவுடன் எல்லோரும்குளிக்கச்சென்றார்கள். நாங்களிருவரும் ஷை கரையில் குளிப்பதற்கு இறங்கினவுடனே ஒருவர் ஏனையா நீங்கள் எங்கள் நடுவிலேயே மறுபடியும் வருகிறீர்களே என்று கத்தினார். அவரைப்பார்த்து, ஸ்ரீமான் நாயக்கர் உமக்கு தலையில் உஷ்ணம் ஏறி பித்தம் பிடித்து கொண்டாப்போல் இருக்கிறது, தண்ணீரில் நன்றாய் முழுகி, சாந்தப்படுத்தி கொள்ளும்என்றுசொன்னவுடன் ஷை பார் பேசாமல் அடங்கிவிட்டார். மற்றவர்களும், எங்களை அவ்விடம் வரச்செய்யாமல் இருப்பதற்குச்செய்த சூழ்ச்சிகள் ஒன்றும் எங்

[இதின் தொடர்ச்சி 10-வது பக்கம் பார்க்க)



அனைத்துயிர் ஒன்றென்றெண்ணி
அரும்பசி யெவற்கும் ஆற்றி
மனத்துளே பேதாபேதம்
வஞ்சம் பொய் களவு சூது
சினத்தையும் தவிர்ப்பாயாகில்
செய்தவம் வேறொன்றுண்டோ
உனக்கிது உறுதியான
உபதேசம் ஆகும்தானே.

# குடி அரசு.

குரோதன-ஹு தை-மீ கக-உ

# பிறப்புரிமை சுயராஜ்யமா? சுயமரியாதையா?

நமது நாட்டில் உள்ள பொதுமக்கள் ஒருவருக்கொருவர் தங்கள் சூழ்ச்சிகளாலும், தந்திரங்களினாலும், ஒருவரை யொருவர் இழிவுபடுத்தியும், அடிமைப்படுத்தியும் கொடுமை செய்து வருவதின் பலனாய், அந்நிய அரசாங்கத்தின் கீழ் ஆளப்பட்டு துன்பமடைந்து வருகிறோம். இத்துன்பம் நமக்கு ஒழியவேண்டுமானால் நாம் பிறரைச் செய்யும் துன்பம் ஒழிய வேண்டும். அந்நியஅரசாங்கத்தார் நம்மைச்செய்யும் கொடுமையை ஒரு தட்டில் வைத்து, நம்நாட்டில் சிலர் நம்மைச்செய்யும் கொடுமையையும், நம்மைக்கொண்டு மற்றவர்களைச் செய்யச்செய்யும் கொடுமையையும் ஒரு தட்டில் வைத்து தூக்கிப் பார்த்தால், அரசாங்கத்தின் கொடுமையைவிட, நம்மவர்களின்கொடுமையே பெரிய பளுவானதாயிருக்கும். நமது நாட்டில் சிலவேஷக்காரர்கள் சுயராஜ்யம் என்கிற பதமும், சுதந்தரம் என்கிற பதமும், உரிமை என்கிற பதமும், வாழ்க்கையை உத்தேசித்து வாயளவில் பேசி, பொது ஜனங்களை ஏமாற்றி, நகத்தில் அழுக்குப்படாமல் காலங்கழிக்கப்பார்க்கின்றார்களேயல்லாமல், அதற்காக செய்யவேண்டிய காரியங்களில் தங்களுக்குச் செய்ய யோக்கியதையில்லாவிட்டாலும், வேறு யாராவது செய்தாலும் தங்களுக்கு யோக்கியதை குறைந்து போகுமே யென்கிற பயத்தால், அதற்கு வேண்டிய முட்டுக்கட்டைகளைப் போட்டு, தாங்களே முன்னணியிலிருக்கவேண்டிய மாதிரியில் ராஜீயவாதிகளென்னும் பேரால் வாழ்ந்துவருகின்றார்கள். நமது நாட்டுக்கு முக்கியமாக வேண்டியது, சுயராஜ்யமா? சுயமரியாதையா?

சுயராஜ்யம் எனது பிறப்புரிமை என்று சொல்லி ஜனங்களை ஏமாற்றிப் பிழைக்கின்ற அநேகர், சுயராஜ்யம் இன்னதென்பதைப்பற்றி ஒரு வார்த்தையாவது சொன்னவர்களல்ல. அதை ஜனங்கள் அறியாதிருக்கும்படி எவ்வளவோ சூழ்ச்சிகள் செய்து வருகின்றார்கள். மகாத்மா காந்தி அவர்கள், சுமார் ஐந்து வருடங்களுக்கு முன்பாக சென்னைக்கு வந்திருந்த சமயம் ஓர் கூட்டத்தில் பேசும்போது, என்னுடைய சுயமரியாதையைக் காப்பாற்றிக்கொள்ள யோக்கியதை இல்லாமலிருக்குமானால், நான் சுயராஜ்யத்தை விரும்புவதில் அர்த்தமே யில்லை யென்று சொல்லியிருக்கிறார்.

மனிதனுக்கு அவனுடைய சுயமரியாதை என்னும் தன்மானத்தைக் காப்பாற்றிக்கொள்ளுவதுதான் பிறப்புரிமையே யல்லாமல், அரசியலான ராஜீயமென்னும் சுயராஜ்யம் ஒருக்காலும் பிறப்புரிமையாக மாட்டாது. ராஜீய பாரமானது ஒரு தொண்டு. வீதி கூட்டுவதும், விளக்குப் போடுவதும் காவல் காப்பதும், எப்படி சேவையாயிருக்கிறதோ, அதுபோலவே ராஜீய பாரமென்பதும் ஒரு சேவைதான். தேசத்தில் அவனவனது வாழ்க்கைக்கும், அல்லது பொது நன்மைக்கும் எப்படிப் பல தொழில்கள் இருக்கின்றனவோ, அதுபோல் ராஜீயபாரமென்பதும் ஒரு தொழில்தான். இத்தொழிலை இன்னார்தான் செய்யவேண்டுமென்றுவது, இன்னாருக்குத் தான் உரிமை யென்றுவது, கடவுள் யாருக்கும்பிரித்துக் கொடுக்கவேயில்லை. மனிதராகப் பிறந்தவர்கள் எல்லோரும் ஊமை, கூன், குருடு, செவிடு உட்பட இதற்கு அருகர்கள் தான். ஆதலால், அவ்வுரிமையை எல்லோரும் சமமாய் அடையவேண்டியதுதான். ஆன போதிலும், மனித ஜென்மத்திற்கு இக்கேவல ஆக்ஷியை பிறப்புரிமை என்று சொல்ல முடியாது. மனிதனுக்கு உண்மையான பிறப்புரிமை என்று சொல்லுவது அவனது சுயமரியாதையும், பரோபகாரமென்பதுமேதான்.

சுயமரியாதை இல்லாத ஒரு மனிதனுக்கு சுயராஜ்யம் அவசியமே இல்லாததாகும். சுயராஜ்யம் இல்லாத எந்த மனிதனுக்கும், கூடசுயமரியாதைஎன்பதுஅவசியமானதேயாகும். சுய மரியாதை அற்றவனைப் பிணமென்று தான் சொல்ல வேண்டும். அப்படிப் பார்க்கின்ற போது நமது தேசத்தில், சுயமரியாதை யற்று, பூச்சி புழுக்கள் போலும், நாய் பன்றிகள் போலும், பிசாசுகள் அரக்கர்கள் போலும், வாழும் ஜனங்கள் கோடிக் கணக்காய் இருக்கின்றன. லக்ஷக் கணக்காய் தினமும் பிறக்கின்றன. இச் சமூகத்திற்கு சுயராஜ்யம் எதற்கு? உதாரணமாக, மனித உடல் தாங்கிய ஒருவன், அவனுடைய தெய்வத்தைக், காண—தரிசிக்க உரிமையற்ற ஒருவன், எப்படி சுயமரியாதையுள்ளவனாவான். அந்த சமூகத்திற்கு, சுயராஜ்யம் எதற்கு? எந்த ராஜ்ய மிருந்தால்த்தான் அவர்களுக்குக் கவலை யென்ன? இம் மாதிரி ஓர் சமூகத்தாரை சுயமரியாதை யற்று ஒடுக்கி வைத்திருக்கும் ஓர் ராக்ஷஸ சமூகத்தார், சுயராஜ்ய மடைவது மற்ற சமூகங்களுக்கு நன்மையைத்தருமா? அல்லது ஒடுக்கப்பட்ட வகுப்பாருக்கும் சேர்ந்து தான் சுயராஜ்யம் தேடுவது என்று சொல்லுவோமானால், அவர்கள் தங்கள் தெய்வங்களைக் காணவும், தரிசிக்கவும் முடியாத படியும், தெருவில் நடக்கவும், கண்ணில் தென்படவும் முடியாத படியும், வைத்திருப்பதற்குக் காரணம் சுயராஜ்யம் இல்லாமைதானா? அன்னிய ராஜ்யம் நமது ஜனங்களை இம்மாதிரி கொடுமையாக நடத்தும்படி, நமக்குச் சொல்லவே யில்லை. எந்தக்காரணத்தைக் கொண்டோ, அந்நிய ராஜ்ய பாரங்கள் நமது நாட்டிற்கு ஏற்படாவிருந்திருக்குமேயானால், இந்த சுயமரியாதை இன்னதென்று உணருவதற்குக் கூட நமக்குச் சவுக்கரியம் கிடைத்திருக்காது. நமது நாட்டு மக்களின் சுயமரியாதைக்கு விரோதமாயிருப்பது, நம் நாட்டார் சிலரின் ஆதிக்கத்தினாலே யல்லாமல், அந்நிய அரசாங்கத்தின் ஆதிக்கத்தினாலல்ல. ஆனால், நமது நாட்டில் பெரும்பாலோர் சுயமரியாதை யற்றிருக்குந் தன்மை, அந்நிய அரசாங்கத்தாருக்கு அநுகூலமாயிருப்பதினால் இக்கொடுமைகளைப்போக்க அவர்களுக்கு அதிகக் கவலையில்லை,

ஆனபோதிலும், அவர்களுடைய தத்துவம் ஒரு நாளும் இவ்வித சுயமரியாதைக் கேடுக்கு அநுகூலமாய் இருப்பதில்லை. ஒரு தேசம் சுதந்தரமடைய வேண்டும் என்ற உண்மையான கவலை இருக்குமானால், அக்கவலைக்கு அவர்கள் அருகர்களா, இல்லையாவென்பதைப் பரீக்ஷிக்க வேண்டுமானால், அவர்கள் சுயமரியாதை யுள்ளவர்களா? இல்லையா, வென்பதிலிருந்து தான், அவர்களுடைய அருகதை வெளிப்படும். அஃதில்லாமல், சுதந்தரத்துக்காக, செய்யப்படும் எவ்வித முயற்சிகளும் தனிப்பட்டவர்கள் வயிற்றுப்பிழைப்புக்கும், வாழ்க்கை நலத்துக்கும், சுய மரியாதையில்லாத நிலைமையைப் பலப்படுத்தவும்தான் ஆகுமேயல்லாமல், வேறொன்றுக்கும் உதவாது. அதை உத்தேசித்தேதான், மகாத்மா காந்தியும் சுதந்தரம் பெறுவதற்காக ஏற்பட்ட திட்டங்களை, சுய மரியாதை அடைவதற்கான திட்டங்களாகப் போட்டுவிட்டார். தீண்டாமை ஒழிய வேண்டுமென்று சொல்வதும், கதர் அணியவேண்டுமென்று சொல்லுவதும், நம் நாட்டு மக்களின் சுய மரியாதையின் ஜீவ நாடிகள். ஒரு மனிதனை மற்றொரு மனிதன் தெருவில் நடக்கவும், பக்கத்தில் வரவும், கண்ணில் தென்படவும், அவனது தெய்வத்தைக் கண்டு தெரிசிக்கவும், முடியாமற்படிவைத்திருக்கிறவரையில், சுயமரியாதை இல்லை யென்றும், அப்படிப்பட்டவனுக்கு சுதந்தர மென்பது அர்த்தமில்லாத வார்த்தையென்றும், ஒரு மனிதன் தன் உடலிற் போதிய சக்தியிருந்தாலும், ஜீவனத்

## தென் ஆப்பிரிக்கா பிரதி நிதிகள்.

தென் ஆப்பிரிக்காப் பிரதிநிதிகள் நாளது 24-ந் தேதி கோயமுத்தூர் ஜில்லாவாகிய நமது ஜில்லாவுக்கு வரப்போவதாக அறிந்து மிகவும் சந்தோஷிப்பதோடு, மனப்பூர்த்தியாய் வரவேற்கிறோம். தென் ஆப்பிரிக்காக் கவர்ன்மெண்டார் தென் ஆப்பிரிக்காவிற்குக் குடியேறின இந்திய சகோதரர்களுக்குச் செய்து வரும் ஆணவம் பொருந்திய கொடுமைகள் சுயமரியாதையுள்ள சமூகத்தாருக்குச் சகிக்க முடியாதிருப்பினும்,- உயிரைத்துறந்தாவது தங்களுடைய சுயமரியாதையைக் காப்பாற்றிக்கொள்ள வேண்டிய அவசியமுள்ளதாயிருப்பினும், இக்கஷ்டத்தை நீக்குவதற்குத் தென் ஆப்பிரிக்கா இந்தியர்கள் தமிழ்நாட்டில் சுற்றுப்பிரயாணம் செய்வதில் காதறுந்த ஊசியளவு பிரயோஜனமாவது உண்டாகுமா வென்பது நமக்குச் சந்தேகமாகவே யிருக்கிறது. ஆயிரம் தென்னாப்பிரிக்கா கவர்ன்மென்டைக் கசக்கிப் பிழிந்து, சத்து எடுத்ததற்குச் சமானமான தமிழ் நாட்டுப் பிராமணர்கள் சிலர், அதாவது, தமிழ் நாட்டில் தங்களுக்கு முந்தியுள்ள பூர்வீகக் குடிகளாகவும், தங்கள் நாட்டாராகவும் இருக்கிற ஜனங்களைத் தொடக்கூடாதவர்கள்— தெருவில் நடக்கக்கூடாதவர்கள்— கண்ணில் தென்படக்கூடாதவர்கள் — அவர்கள் தெய்வத்தைக் காணக் கூடாதவர்கள்— அவர்கள் மதவேதமென்பதைப் படிக்கக் கூடாதவர்கள் — என்று கொடுமைப் படுத்திவைத்திருக்கிற ஒரு கூட்டத்தார்— இக்கொடுமைகளுக்கு ஆதாரமாக, ஸ்மிருதிகளையும், சாஸ்திரங்களையும், புராணங்களையும், சட்டமாக வைத்துக்கொண்டிருக்கிற ஒரு கூட்டத்தார்—, இக்கொடுமைகளை ஒழிக்கப் பாடுபட்ட மகாத்மா காந்தி போன்றவர்களை மூலையில் உட்கார வைத்த ஒரு கூட்டத்தார்—கொடுமைகளை நிலை நிறுத்த வருணாசிரம ஸ்தாபனங்களையும் பிராமணன் ஆகிய பத்திரிகைகளையும் வைத்துக் கொண்டும், இக்கொடுமைப் படுகிறவர்களிலேயே சில சுயமரியாதையற்றவர்களையும், சமூகத் துரோகிகளையும் பலவழிகளில் தங்கள் சுவாதீனப் படுத்திக் கொண்டும் பிரசாரம் செய்யும் ஒரு கூட்டத்தார்—இத்தென்னாப்பிரிக்கா தூதர்களை ஊர் ஊராய் கூட்டிக்கொண்டு திரிவதினாலும், இவர்களைக் கூட்டி, வரப்போகும் எலக்ஷனுக்கு தங்களுக்கு வோட்கிடைக்கும்படியானமாதிரியில், சூழ்ச்சிப் பிரசாரம்செய்வதினாலேயும், தென்னாப்பிரிக்கா இந்தியர்களுக்கு என்ன நன்மை ஏற்பட்டுவிடக்கூடும், இம்மாதிரியான ஜனங்களின் தந்திரங்களால் நடத்தப்படும் பிரசாரம், தென்னாப்பிரிக்கா சகோதரர்களுக்கு எவ்விதம் பயன்படும் என்பதை மாத்திரம் நாம் வெளியில் சொல்லாமலிருக்க முடியவில்லை.

ஆனல் ஆங்காங்கு கூட்டிக் கொண்டு போவதில், அவர்கள் இவர்களுக்கு உபசாரம் படித்துக் கொடுக்கவில்லை, இவர்கள் அவர்களுக்குச் சாப்பாடு போடவில்லை : இவர்கள் அவர்களுக்கு வண்டி கொடுக்கவில்லை; என்று இம்மாதிரி ஒரு கக்ஷியாரின் மேல் பொது ஜனங்களுக்குத் துவேஷமுண்டாகும் படியான விஷமப்பிரசாரம் செய்ய மாத்திரம் உபயோகப்படுமென்பதை நாம் மறைக்கமுடியாது.

துக்கு வேண்டிய அளவு தொழிலில்லாமல் வைத்திருப்பதானல், அவன் எவ்விதத்திலும் சுய மரியாதையோடு வாழ முடியாதென்றும், ஜீவனத்திற்காக எப்படியாவது, தன்னுடைய சுய மரியாதையை இழக்கத்தான் நேரிடுமென்றும், கருதியே பெரும் பான்மையான ஏழைகளுக்கு ஜீவனோபாயத்திற்கு ஆதாரமான கதரையும், வற்புருத்தி வந்தார். மற்றவர்களை அடிமைப்படுத்தி வைத்திருப்பதினாலேயே வாழ முடியும் என்கிற நிலைமையடைந்த நமது நாட்டிலுள்ள ஒரு சமூகத்தார், இத்திட்டத்தை அடியோடு ஒழித்து பழையபடி தங்களுடைய ஆதிக்கத்தைப் பலப்படுத்திக்கொள்ளத் தகுந்த மாதிரியில் ஜெயம் பெற்று வருகிறார்கள்.

இந்நிலைமையில் "சுதந்தரம்", "சுயராஜ்யம்," "உரிமை," என்கிற வார்த்தைகள் தேச ஜனங்களுக்குப் பெரிய இழிவுக்கும், கொடுமைக்கும் ஆதாரமானதுதான். ஆதலால், நமது தேசம் உண்மையான உரிமை அடைய பாடுபட வேண்டுமானல், மக்களின் சுயமரியாதைக்காகத்தான் முதலில் பாடுபட வேண்டும்.

## தென்னிந்திய ரெயில்வே ஆலோசனை கமிட்டி.

இம்மாதம் 27-ந் தேதியன்று சென்னையில் நடைபெறப் போகும், தென்னிந்திய ரெயில்வே ஆலோசனைக் கமிட்டிக் கூட்டத்தில், கீழ்க்கண்ட தீர்மானங்களை கொண்டுவரப் போவதாக, ஷை கமிட்டி மெம்பர், கோயமுத்தூர் ஸ்ரீமான். சி.எஸ். இரத்தினசபாபதி முதலியாரவர்கள் தெரிவிக்கிறார்.

(1) ரெயில்வே பிளாட்பாரத்தில் பிரயாணிகளுக்கு தண்ணீர் கொடுப்பதில் எவ்வித வித்தியாசமும் பாராட்டக்கூடாது.

(2) ரெயில்வே ஸ்டேஷன்களிலுள்ள இங்கிலீஷ் உணவுச்சாலைக்கு, ஐரோப்பியர்களோ, அன்றி இந்தியர்களோ சென்றால் அவர்கள் யாவரையும் ஒன்று போலவே, நடத்தவேண்டும்; மற்றும், ரெயில் வண்டியிலிருந்துகொண்டே உணவைத் தருவித்தாலும், அப்போதும் ஐரோப்பியர், இந்தியர் என்கிற வித்தியாசமின்றியே நடத்த வேண்டும். இங்ஙனம் செய்ய ஷை உணவுச் சாலைகளை நிர்வகிக்கும், மெஸர்ஸ் ஸ்பென்ஸர் கம்பெனியாரை இச்சபை கேட்டுக் கொள்ளுகிறது.

3, ரெயில்வேஸ்டேஷன்களிலுள்ள இந்திய உணவுச்சாலைகளில் எவ்வித ஜாதி வித்தியாசமும் பாராட்டலாகாது; ஜாதி வேற்றுமையைக் காட்டக்கூடிய—இப்போதுள்ள சாதனங்களை—உடனே நீக்கிவிட வேண்டும். மேலும், ஒவ்வொரு போஜன சாலையிலும், சகல ஜாதியார்களிலும், மரக்கறி பதார்த்தங்கள் உட்கொள்ளுபவர்களுக்கென்றும், மாமிச ஆகாரவகைகள் உட்கொள்ளுபவர்களுக்கென்றும் இரண்டு இடங்கள் பிரிக்கப்படவேண்டும். முன்னர் கூறிய பிரிவிற்கு,பிராமண சமையற்காரரையும், பின்னர் கூறிய பிரிவிற்கு மகம்மதிய சமையற்காரரையோ, அல்லது ரஜபுத்ர சமையற்காரரையோ நியமிக்க வேண்டும். ஒவ்வொரு பிரிவிலும் பெண்களுக்கென தனி இடங்கள் ஒதுக்கப்பட்டிருக்க வேண்டும்.

II இப்பொழுதுள்ள கோயமுத்தூர் ரெயில்வேஸ்டேஷனை ஒரு ஜங்ஷனாக் மாற்றவேண்டும்.

நமது குறிப்பு:——

தீர்மானங்களின் பிரேரேபனைகளை நாம் மனப்பூர்வமாய் ஆதரிப்பதோடு மிகவும் பாராட்டுகிறோம். உண்மையிலேயே இத்தீர்மானங்கள் வெகுகாலத்திற்கு முன்னதாகவே செய்திருக்கவேண்டியது. தென்னிந்திய ரெயில்வே ஆலோசனைக்கமிட்டியிலுள்ள மற்றக்கனவான்களும் இதை ஆதரித்து அமுலுக்குக் கொண்டுவர ஏற்பாடு சேய்ய வேண்டுமாய்க் கேட்டுகொள்ளுகிறோம். ஆனல் பிராமண சமையற்காரரையே நியமிக்கவேண்டுமென்பதற்கு பொருள் விளங்கவில்லை.

ப—ர்

## "அதனுல்தான் உங்கள் வீட்டின்மேல் காக்கம் பறந்தது"

சிறு பிள்ளைகள் ஒருவருக்கொருவர் சண்டை போட்டுக்கொள்ளும்போது—சரியான தோஷம் சொல்லுவதற்கு வழியில்லாதபோது—கோபத்தில் வெறியால் ஏதாவதொன்றைச் சொல்லி வைவதற்கு, ஒருவன் மற்றவனைப் பார்த்து, அதினுல்தான் உங்கள் வீட்டின்மேல் காக்காய் பறந்தது என்று சொல்வதுண்டு. அதுபோலவே வகுப்புவாரிப் பிரதிநிதித்வத்தைப் பற்றி குற்றம் சொல்ல வகை இல்லாமற்போனல் ஏதாவது சொல்லித் தீரவேண்டிய நிலைமைக்கு ஸ்ரீமான். கல்யாணசுந்திர முதலியார் வந்துவிட்டதால், சென்ற வாரத்திற்கு முந்தின பத்திரிகையில் வகுப்புவாரிப் பிரதிநிதித்வம் என்கிற தலைப்பின்கீழ்,முஸ்லீம்லீக் தீர்மானத்தைப்பற்றி எழுதிவிட்டு வகுப்புவாரிதீர்மானம் தப்பு என்கிறதற்கு ஆதாரமாக முஸ்லீம் லீக்கில் மௌலானா முகமதலிக்கும், சர். அப்துல் ரஹீமுக்கும் ஷை தீர்மானவிஷயத்தில் ஏற்பட்ட அபிப்பிராய பேதத்தை எடுத்துக்காட்டி, இவ்வி

## ஸ்ரீமான் ஸி. ராஜகோபாலாச்சாரியார்.

கள்ளின் வெற்றியே, வெற்றி என்ற தலைப்பின் கீழ் —"அரசாங்கத்தார் நடத்தி வரும். பொல்லாத கள்ளுக் கடைகளை மூட வழி தேடுங்கள்,, என்று சொன்னேன்; அதற்கு வகுப்பு வாரிக்காரரும் —ஜஸ்டிஸ் கக்ஷியாரும் இன்னும் சிலரும் தன்னைப் பற்றி, சந்தேகப் படுகிறார்கள் என்றுசொல்லுகிறார்.

ஆனால் கக்ஷியார்கள் இவர்பேரில் சந்தேகப் படுவதற்கு சொல்லும் காரணங்களுக்கு மாத்திரம் பதில் சொல்லுவதில்லை. சந்தடி சாக்கில் ஜஸ்டிஸ் கக்ஷியைப்பற்றி சொல்லும்போது "நியாயக் கக்ஷி (பிராமணரல்லாதார்—ஜஸ்டிஸ் கக்ஷி) என்று பெயர் வைத்துக் கொண்டு, சிறு வகுப்பார்களை (=பிராமணர்களை) அனியாயமாய் (=யோக்கியமான பிராமணர்களின் மேல் அபாண்டமான பழிகளைச் சொல்லி] பசுபலத்தால்(=மிருக பலத்தால்) ஒடுக்கியாள (=அவர்களுக்கு மேலே போக] முயலும் (=வகுப்புவாரி பிரதி நிதித்வ சேட்க்கும்) கக்ஷியாரை (=பிரசாரம் செய்யும் கக்ஷியாரை) நான் ஆதரிப்பதாய் (=பிராமணராகப் பிறந்த நான் ஆதரிட்டதாய்) ஏன் எண்ணுகிறீர்கள் (=பிராமணர்களே பயித்தியக்காரத்தனமாய் ஏன்,, எண்ணுகிறீர்கள்) என்று எழுதுகிறார். இதிலிருந்தே ஸ்ரீமான். ஆச்சாரியாரின் பரிசுத்த தன்மையும், பிராமணர்களையும், பிராமணரல்லாதாரையும் சமமாய் நினைக்கும் தன்மையும் வாசகர்கள் தான் உணரவேண்டும்.

அன்றியும், ஸ்ரீமான். ஆச்சாரியார் ஒரே அடியாய், கள்ளையே நிறுத்திவிடப் போவதாயும், அப்புண்ணிய காரியத்தை வகுப்புவாரிக்காரரும்(— ஸ்ரீமான். ஈ. வெ. ராமசாமி நாயக்கரும் ஜஸ்டிஸ்காரரும் மற்றும் பல பிராமணரல்லாதாரும்) ஆக்ஷேபிப்பதாயும், பாமர ஓட்டர்கள் நினைக்கும்படி மிகவும் துக்கப்படுகிறார். ஸ்ரீமான். ஆச்சாரியார் இதுவரை கள்ளை நிறுத்த காரியத்தில் நடக்கக்கூடியதாய்

த அபிப்பிராயபேதம் உண்டாவதால் வகுப்புவாரிபிரதிநிதித்வம் கூடாது என்கிறார். இருவருக்கும் அபிப்பராய பேதம்,வகுப்புவாரிப்பிரதிநிதித்துவம்வேண்டுமா வேண்டாமா என்கிறவிஷயத்தில்இல்லவேஇல்லை, என்பதையும், அதற்காக ஏற்படுத்தும் திட்டதில் தான் என்பதையும் ஸ்ரீமான் முதலியார் அறிந்திருந்தும் இதைப்பொதுஜனங்களுக்கு திரித்துக் கூற வேண்டிய நிலைமை அவருக்குஏற்பட்டது பற்றி நாம் பரிதாபப் படுகிறோம். ஸ்ரீமான் முதலியார் கூற்றுப் போலவே அபிப்பராய பேதம் இருந்திருந்தாலும்; அதற்காகஅத்தத்துவமே வேண்டாமென்று சொல்லிவிடலாமா? சுயராஜ்ய விஷயமான தீர்மான விஷயத்தில் அபிப்பராய பேதமேற்பட்டால் அதற்காக சுயராஜ்யமே வேண்டாமா? என்று நாம் கேட்கிறோம்.

———

## ஈழவர்களின் கோயிலுக்குள் செல்ல புலையருக்கு அனுமதி

கொச்சி திருவாங்கூர் சமஸ்தானங்களில் சென்ற சில வருடங்களாக கவர்ண்மெண்டாரது பரிபாலனைத்துக்கு உட்பட்டிருக்கும், ஆலயங்களுக்குள் சென்று தொழத்தங்களுக்கு அநுமதியளிக்க வேண்டுமென்று, ஈழவர்கள் கிளர்ச்சி செய்துவந்த விஷயத்தை வாசகர்கள் மறந்திருக்க முடியாது. எனினும், இவர்களுக்குச் சொந்தமான கோயில்கள், கொச்சி, திருவிதாங்கூர் சமஸ்தானங்களிலிருந்த போதிலும், இவர்கள், தங்களிலும் கீழ்பட்டவர்களாகக்கருதப்படும் புலையர்களை அவற்றுள் அநுமதிக்கிறார்களா என்கிற சந்தேகம் பொது ஜனங்களுக்கு இருந்து வந்தது. இந்த சந்தேகத்தைப் போக்கிக் கொள்ளுவதற்காக அவர்கள் தங்களுடைய எல்லா கோவில்களுக்குள்ளும் புலையர் முதலிய தாழ்ந்த ஜாதியார் என்போரை விட முயற்சி செய்து வருகின்றார்கள். அல்லாமலும் ஏற்கனவே சில கோயில்களுக்குள் புலையர்கள் செல்ல அநுமதியளித்துவிட்டனர். மற்றக் கோயில்களிலும், இதேமாதிரி புலையர்களை அநுமதிக்கும்படி, வைதிக கோஷ்டியாரைத்தூண்ட, சீர்திருத்த கோஷ்டியார் சகல முயற்சிகளையும் செய்து வருகின்றார்கள், பல்லுருத்தி, பவானீஸ்வர கோவிலுக்குத் தெற்கே, ஸ்ரீமான். கே. நாராயணனுக்குச் சொந்தமான ஈழவக்கோயிலுக்குள் செல்ல புலையர்களுக்கு முதல், முதலாக அநுமதியளிக்கப்பட்டது, ஸ்ரீ, நாராயண குருவின் பிரதம சீடரான, சுவாமி போதானந்தர் தானே புலையர்களைக் கோயிலுக்குள் பிரதட்சணமாக அழைத்துச்சென்று அங்கு அவர்களுக்குப் பிரசாதங்கள் வழங்கினர். சுவாமி சத்தியவிரதன் என்பவரும், ஸ்ரீமான். கே, ஐயப்பனும். தங்களுக்கும், கீழ் நிலைமையிலுள்ளவர்களுக்கும் உள்ள வித்தியாசங்களைப் போக்கிக்கொள்ளக் கூடிய அவசியத்தைப் பற்றிப்பேசுகையில், சமீபத்தில், பல்லுருத்தியில்புலையருடன் சமபந்தி போஜனம்செய்ததற்காக,ஈழுவர்களுக்கு ஏற்பட்டிருந்த மனஸ்தாபங்களைத் தாங்கள் போக்கிவிட்டதாகவும் கூறினர். கும்ப மாதத்தில் தங்கள் தோட்டத்தில் பறிக்கும் எல்லா தேங்காய்களையும், இவ்வூரிலுள்ள (கொச்சி) ஈழவர்கள் பள்ளிக்கூடங்கட்டும் செலவிற்கு நிதி சேர்ப்பதற்காக கொடுத்துவிட வேண்டுமென்று தீர்மானிக்கப்பட்டதாகத் தகவல் எட்டியிருக்கிறது.

———

என்னவழி சொல்லி இருக்கிறார்.? சட்டமறுப்பின்பேரால் சிலபேர், முட்டுகட்டையின் பேரால் சிலபேர்,சுயராஜ்யத்தின் பேரால் சிலபேர்,வெற்றிமேல் வெற்றியின் பேரால் சிலபேர், சட்ட சபைக்கு போகப்பார்ப்பது போல் கள்ளை ஒழிப்பதின் பேரால் தனக்குவேண்டிய சிலபேரோ,அல்லது தானே சட்டசபைக்கு போகப்பார்க்கிறார். கள்ளை விலக்க சட்டசபை உதவுமானால் மகாத்மா அதை விட்டுவிடுவாரா? அல்லது கள்ளுக்கடை மறியலுக்காக ஜெயிலுக்கு போய் மூத்திரச்சட்டியில் கஞ்சி வாங்கி குடிதவர்கள்,சட்டசபைக்கு போகப்பயப்படுவார்களா? அல்லது அவர்களுக்கு யோக்கியதை இல்லையா? இதையெல்லாம் பொது ஜனங்கள் யோசிக்க மாட்டார்கள் என்றும், பொதுஜனங்களை சுத்த மூட்டாள்கள் தானே என்றும் நினைத்து கொண்டதால் இவ்வித தந்திர வழிகளில் தன் காரியத்தை நிறைவேற்றிக் கொள்ள துணிந்துவிட்டார் என்று தான் எண்ண வேண்டியிருக்கிறது'

கள்ளை நிறுத்த சட்டம் செய்ய சட்டசபைக்கு போகலாம் என்பவர் தீண்டாமை ஒழிக்க சட்டம் செய்ய சட்டசபைக்கு போகலாம் என்று ஏன் சொல்லக் கூடாது. அப்படிச் சொன்னால் ஒருசமயம் சாக்காரார் தீண்டாமை ஒழிய சட்டம் செய்ய சுலபத்திற் ஒப்புக்கொள்ளுவார்கள் ;பிராமண சட்டசபை மெம்பர்கள் ஆக்ஷேபனை பலிக்காமல் போய் காரியத்தில் ஒருசமயம் தீண்டாமைஒழிந்தாலும்ஒழிந்துபோகும்;ஆதலால் அதை ஒழிக்க முடியாத இடமாகிய ஜனங்களிடமே சொல்லிக்கொண்டு காலத்தை நடத்தலாம்; கள்ளையும் ஒழிக்கமுடியாத இடமாகிய சர்க்கார் சட்டசபையிடமே சொல்லிக்கொண்டிருக்கலாம்; எப்படியாவது ராஜ்யப் பேச்சு ரதம் ஓடிக்கொண்டிருக்க வேண்டும், என்கிற எண்ணம்போலும்.

## பல்லடம். தாலூகா போர்டு பிரசிடெண்டு எலெக்ஷன் ரத்தாகிவிட்டது.

———

சென்ற அக்டோபர்மீ பல்லடம்தாலூகா போர்டுக்கு ஸ்ரீமான்.வடுகபாளையம் R.சுப்பராயக் கவுண்டரை பிரசிடெண்டாக தாலூகா போர்ட் எலெக்ஷனில் தேர்ந்தெடுக்கப்பட்டது. மேற்படி சுப்பராயக் கவுண்டருக்கு போட்டியாக உள்ள கூட்டத்தைச் சேர்ந்த B. முத்துக்குமாரசாமிக் கவுண்டர், சுப்பராயக் கவுண்டர் எலெக்ஷன் செல்லாதென்றும், சுப்பராயக் கவுண்டர் மூன்று மாதங்கள் வரை போர்டு மீட்டிங்குகளில் கலந்துகொள்ளவில்லையென்றும், மூன்று மாதங்கள் வரத் தவறியவர் தமது பிரசிடெண்டு ஸ்தானத்தையும் மெம்பர் ஸ்தானத்தையும், இழந்துவிட வேண்டுமென்றும், அவர் எலெக்ஷன் காலத்தில் மெம்பரல்லாதவரென்றும் மெம்பரல்லாதவருக்கு எலெக்ஷன் செய்தது ஞாயமற்றதென்றும், மகா-ா-ா-ஸ்ரீ கோயமுத்தூர் டிஸ்ட்ரிக்டு ஜட்ஜு கோர்ட்டில் மனுச்செய்து கொண்டார்.கோர்ட்டாரவர்களும்வாதியின் மனுவை அங்கிகரித்து சுப்பராயக் கவுண்டர் மூன்று மாத மீட்டிங்குகளுக்கு வரத்தவறியதால் அவர் மெம்பர் ஸ்தானத்தை இழந்துவிடவேண்டியதென்றும் பிரசிடெண்டு ஸ்தானத்தை அவர் வகிக்கக்கூடாதென்றும் தீர்ப்புச் செய்துவிட்டார்.

———

ஒரு நிருபர்.

## சென்னை மாகாண வன்னிய குலக்ஷத்திரியத் தலைவர்களின் மகா நாடு.

ஷெ மகாநாடு நாளது குரோதன ஹு தைமீ 11-12-ந் தேதிகளாகிய (24, 25-1-26) ஞாயிறு திங்கள் கிழமைகளில் பகல் 2 மணிக்கு சென்னை மைலாப்பூர், வன்னியர் சத்திரத்தில், ஐக்கிய நாணயச் சங்க கௌரவ ரிஜிஸ்டிராரும், பஞ்சாயத்துக் கோர்ட்டு பிரசிடெண்டுமாகிய நாட்டறம்பள்ளி ஸ்ரீமான். சி. சாமுண்டிகவுண்டர் அவர்கள் அக்கிராசனத்தின் கீழ் நடைபெறும். அடியிற்கண்ட விஷயங்கள் யோசிக்கப்படும்:—

வன்னிய குலமித்திரன், க்ஷத்திரியன் ஆகிய பத்திரிக்கைகளைப்பற்றியும், வரப்போகும் சட்டசபை எலெக்ஷனுக்கு நமது மரபினர்கள் யாரார் எந்தெந்த ஜில்லாக்களுக்கு நிற்பதென்பதைப் பற்றியும், திருவண்ணாமலை, வள்ளவனூர், மாயவரம் முதலிய மடாலய திருப்பணிகளைப் பற்றியும், பேசி முடிவு செய்யவேண்டியிருக்கிறது. ஆதலால் சட்டசபை அபேக்ஷகர்களும், மற்றும் குலாபிமானிகளும் விஜயம் செய்யவேண்டுகிறோம் எனவன்னிய குலமித்திரன், பத்திராதிபர். ஸ்ரீமான். அ. சுப்பிரமணிய நாயகர், முதலிய 30 கனவான்கள் கையொப்பமிட்டு எழுதுகிறார்கள்.

---

(3-ம் பக்கத்தின் தொடர்ச்சி]

கோழி திருடியவனைக் கண்டு பிடிப்பதற்காக ஒரு அரசன் பெருத்த கூட்டத்திலே திருடியவன் தலையிலிருப்பது என்ன பார் என்றவுடன், திருடிய மனிதன் தலையைத் தடவிப் பார்த்ததுபோல், ஒருசாராரைமட்டும் ஏன் ஆத்திரப்படவேண்டும்? நிற்க "குடி அரசு" பத்திரிக்கையில் சில நாட்களாக பிராமண சகோதரர்களை அதிகமாய்த்தாக்கி வருவதுண்மையே. எந்தப் பிராமணர்களை? காங்கிரசில் சேர்ந்து எல்லாரும் ஒன்றென்று மேடையில் பேசிவிட்டு, கீழிறங்கியதும், பார்த்தால்-தொட்டால்-தீட்டுத் தீட்டுத்தான்; சிறுகச்சிறுக சரிப்படுத்திக்கொள்ளலாம்— இப்போது அவ்வளவு கடுமை வேண்டாம்; லேசாக ஒரு திரைபோட்டு சாப்பிட்டு வைதிகர்களை திருப்திபண்ணிக்கொண்டு போகலாம்; வீதியில் நடப்பதுகூட ஒரே நாளில் என்று கட்டாயம் வேண்டியதில்லை; ஒவ்வொரு வீதியாக முன்னேறிவிடலாம்; மேலும் இதையெல்லாம் காங்கிரசில் நாம் அதிகமாய் வற்புறுத்தக் கூடாது; என்று சொல்லி வருகிற தலைவர்களைத் தான் மனதில்வைத்துக்கொண்டு தாக்கிவருகின்றோமேயொழிய, வைதீகர்களை யாவது அல்லது யாசிக்க வருகிறவர்களை யாவது அல்ல என்று நினைக்கின்றேன். இதற்காக உண்மை வழியில் செல்கிற எந்தப் பிராமணரும் துவேஷிக்க மாட்டார்கள். அவர்களுக்காக பிரதிநிதித்துவம் பெற்ற எந்தப் பிராமணரல்லாதாரும் துவேஷிக்க வேண்டியதில்லை. நாயக்கர் வகுப்பு வாரிப்பிரதிநிதித்துவம் கேட்பது தப்பென்று யாராவது சொன்னால் பிராமணரல்லாதார் தீண்டாதார் என்ற இருவகுப்பு இருப்பதே தப்புத்தான். இவை இல்லை என்று ஏற்பட்டு விட்டால் வகுப்பு வாரி பிரதிநிதித்துவம் தப்புத்தான். ஆதலால் இப்படிக்குறுகிய திருஷ்டியுடன் தமிழர்கள் கீழ் நோக்கிப்போகாமல், உரிமைக்காக உழைக்கும் "குடி அரசு" பத்திரிகையை ஒவ்வொருவரும் ஆதரிக்க வேண்டுகிறேன்.

---

## ஸ்ரீ தாயுமான சுவாமிகள்.

### 265-வது வருடத்திய குருபூஜை.

குரோதன தை மீ 24-25-ந் தேதி (6-7-2-26) சனி, ஞாயிறுகிழமைகளில் சென்னை தங்க சாலைக்கு வடபாலுள்ள ஸ்ரீயோகாநந்த ஆச்ரமத்தில் நடைபெறும். இச் செயல் அன்பர்களுதவி கொண்டு நடை பெறுவதால் புண்ணிய விருப்பமுடையோர் முந்துக என்று சென்னை சமரச ஞான சங்கத்தின் அமைச்சர்களான ஸ்ரீமான்கள்- தி. சுப்ரமணியம், சி. ஆனையப்பன் முதலியோர் தெரிவிக்கிறார்கள். ஸ்ரீமான். ஈ. வெ. இராமசாமி நாயக்கர் ஷெ குருபூஜைக்கு வரகூடுமென்று எதிர்பார்க்கப் படுகிறது.

---

## பொன்னம்பல சுவாமி மடம், ஸ்ரீ சிதம்பர சுவாமிகள் குருபூஜை மகோற்சவம்

சென்ற இரத்தாக்ஷி வருடம் தை மீ 24-ந்தேதி விதேகமுக்தி எய்தின, ஸ்ரீ காசி வாசி சிதம்பர சுவாமிகளின் குருபூஜை மகோற்சவம், நாளது தை மீ 13 தேதி மங்களவாரம் திருவாதிரை நட்சத்திரத்தில் வருட குருபூஜை வைபவத் திருநாள் நடை பெறும். அன்பர்கள் யாவரும் வந்திருந்து இருமை நலன் பெற்று உய்ய திருவருளை விழைகின்றோம், என ஸ்ரீ பொன்னம்பல சுவாமிகள் மடத்து ஸ்ரீ பரஞ்சோதி சுவாமிகள் எழுதுகிறார்.

நமதுகுறிப்பு:—

தென்னாட்டிலுள்ள பல்வேறு மடங்களிலும், ஸ்ரீ பொன்னம்பல சுவாமிகள் மடமானது வைதீகப்போர்வை போர்த்த லௌகீகமடமாயிராமல், உண்மையில் ஜீவன்களிடத்தில் அன்பும், சமரசத்தன்மையும், தொண்டு விளக்குவதை நாம் நேரில் பார்த்திருக்கிறோம். அதற்குத் தற்கால மடாதிபதியாயிருக்கும், ஸ்ரீ, பரஞ்சோதி சுவாமி அவர்கள், நமது மகாத்மா அவர்களின் கொள்கையைச் சிரமேற்கொண்டு அநுபவத்தில் நடைபெற உழைத்துவருபவர். அத்துடன், மடத்தில் கதர் உற்பத்தியும், பிரசாரமும் நடைபெற்று வருகிறது. வருடத்தில் லக்ஷக்கணக்காய் வரும்படியுள்ள பல மடங்கள், சோம்பேறிமடங்களாய் விளங்குவதை நாம் நேரில்பார்க்கிறோம். அவைகள் நமது ஸ்ரீ, பொன்னம்பல சுவாமிகள் மடத்தையும், ஸ்ரீ பரஞ்சோதி சுவாமிகளின் உள்ளத்தையும் பின்பற்றினால் தமிழ் நாடும் ஜீவன்களும் முக்தியடைய ஏற்ற சமயமாய் விளங்கும். ப—ர்

---

## கதர் பிரசாரம்.

இம்மாதம் 22-ந் தேதியன்று கதர் போர்டு காரியதரிசி ஸ்ரீமான். எஸ். இராமநாதன், ஈரோட்டினின்று புறப்பட்டு 23-ந் தேதி காரைக்குடிக்கும், 24-ந் தேதி தேவகோட்டைக்கும் சென்று 25-ந் தேதி மதுரை வந்து சேருவார். ஸ்ரீமான். ஈ. வெ. இராமசாமி நாயக்கர் 24-ந் தேதி ஈரோட்டினின்று கொடுமுடிக்குப் போய், அங்கிருந்து 24-ந் தேதி இரவு புறப்பட்டு, 25-ந் தேதி மதுரைக்குப்போய், இருவருமாகச் சேர்ந்து, 26-ந் தேதி விருதுநகர், 27-ந் தேதி சாத்தூர், 28-ந் தேதி ராஜபாளையம், ஸ்ரீ வில்லிபுத்தூர், 29, 30-ந் தேதி திருநெல்வேலி, 31-ந் தேதி ஸ்ரீவைகுண்டம். பிப்ரவரி மீ 1-ந் தேதி திசையன்விளை இவ்விடங்களுக்குச்சென்று திரும்புவார்கள்.

---

## கோயமுத்தூர் முனிசிபால்டியில் சுயராஜ்ஜியக்கட்சியும் தீண்டாமையும்.

கோயமுத்தூர் முனிசிபல் மீட்டிங்கு 18-1-26-ந் தேதி நடந்தது. அன்று ஸ்ரீமான் காலஞ்சென்ற சல்தான் சாய்பபு அவர்களுக்கு அநுதாபத் தீர்மானம் ஒன்று நிறைவேற்றினார்கள். இரண்டாவது ஒரு முக்கிய மான தீர்மானம் ஆலோசனைக்குவந்தது. பாப்பாநாயக்கன்பாளையத்தில் இரண்டு இரவு பாடசாலை யிருந்து வருகிறது. ஒன்று" ஜாதிஇந்துக்கள்" இரவு பாட சாலை, இன்னொன்று "பஞ்சமர்" இரவு பாட சாலை, இரண்டு பாட சாலையும் முனிசிபாலிட்டியால் நிர்வகிக்கப்பட்டு வருகின்றது. ஜாதி இந்துக்கள் இரவு பாடசாலைக்கு அதிக வாடகை வேண்டுமென்றும் இன்னொரு உதவி உபாத்தியாயர் வேண்டுமென்றும் பஞ்சமர்பாடசாலைக்கு 5 ரூபாய் வாடகை வேண்டுமென்றும், அப்பாடசாலைக் கட்டிடக் காரர்கள். விண்ணப்பம் செய்துகொண்டிருக்கிறார்கள். இவ் விஷயம் மீட்டிங்கில் ஆலோசனைக்கு வந்தபோது ஸ்ரீமான் வி. அருணாசலம் செட்டியாரவர்கள் பஞ்சமர்பாடசாலையில் 8 பிள்ளைகள் தானிருப்பதால் அதற்கு தனிப் பாடசாலை வேண்டியதில்லை' யென்றும் ஜாதி இந்துபாடசாலையில் இந்த 8 பிள்ளைகளைச் சேர்த்துக் கொண்டு ஒருஉதவி உபாத்தியாயரும் 15 ரூபாய் வாடகையும் வேணுமானால் கொடுத்து விடலாமென்றும் சொன்னார். சுயராஜ்யக் கட்சியைச் சேர்ந்த ஸ்ரீமான் சி. எம் ராமச்சந்திரஞ் செட்டியாரவர்கள், பஞ்சமப் பிள்ளைகளை இந்துக்கள் பாடசாலையில் சேர்க்கக் கூடாதென்று ஆக்ஷேபித்து விட்டார். காரணம் கிராமத்தில் தகரார் உண்டாகும் என்று சொல்லி விட்டார்.

இந்த ஸ்ரீமான் ராமச்சந்திரஞ்செட்டியார் தான், கோயமுத்தூர் முனிசிபால்டியில் காங்கிரஸ்சுயராஜ்யக்கட்சிகவுன்சிலராகத்தேர்ந்தெடுத்து மாலை சூட்டியவர். இன்னும் இவர் டிஸ்டிரிக்டு எடுகேஷனல் கவுன்சில் பிரசிடெண்டு. இத்தகைய உத்தமர் பிராமணர்கள் புன்சிரிப்புக்கு மயங்கி காலமறியாமற் போனதுதான் விந்தை. கிராமப்பள்ளிக்கூடம், அதுவும் முனிசிபல்பொதுப்பள்ளிக்கூடம், இதில் பஞ்சமப்பிள்ளைகளைச் சேர்த்துக்கொள்ள ஆக்ஷேபிப்பாரானால் இவர் எப்படி காங்கிரஸ் கட்சியை ஆதரிப்பவராவார். இவர் பிராமணர் பிரசாரத்தால் ஸ்தானம் பெற்றதற்காகத் தீண்டாமைவிலக்குக்கு இவ்வளவு தடையாயிருக்கலாமா? அநேக இடங்களில் இவர் ஜாதிபேதம் இல்லையென்றும், தீண்டாமை இல்லையென்றும் பேசியிருக்கிறார். இப்படிப்பட்டவர், மேளவாத்தியத்துடன் பூமாலையிட்டு பிராமணர்கள் ஊர்கோலம் செய்துவைத்ததற்காக தன் மனச்சாக்ஷிக்கு மாறாய் தீண்டாமை விஷயத்தில் இவ்வளவு தலையிடுவாரானால், எவ்வாறு நம்நாட்டில் ஏழைபஞ்சமர்களுக்கு சமத்துவமும், கல்வியும் கொடுக்கமுடியும். கிராம இரவு பாடசாலை அக்ராஹாரமில்லாத இடம். இந்த பாடசாலையில் பஞ்சம பிள்ளைகளைச் சேர்க்கக் கூடாதென்று ஒருதனி இரவு பாடசாலை வைப்பானேன்? கல்வியிலாகாவுக்கு இத்தகைய மெம்பர்களிருப்பதால் ஏழைபஞ்சமர்கள் படுதிண்டாட்டமாகி விடுவதுமல்லாமல் கசாப்புக்கடைக்காரருக்கு ஜீவகாருண்ய சங்கத்துப் பிரசிடெண்டு வேலை கொடுத்தது போலாகும் என்பதைத்தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

ஓர்நிருபர்

# கொடுமுடி கோ வம்சத்தினர் மஹா நாடு

இப்பிரிவினர்கள், சென்ற சில வருடங்களாக, சமூகமுன்னேற்றத்தை குறித்து தம் கடமைகளை உண்மையாகவே ஆற்றிவருகிறார்கள், என்பது வருடந்தோரும் கூடும் அவர்களுடைய மஹாநாடே ரூபிக்கின்றது. இப்பிரிவினர்கள் நாகரீகமடைந்த வகுப்பிற்கு சேர்ந்தவர்களாயினும் தென்னாட்டில் வறுமையினாலோ, அல்லது,சுயநலமே சிறப்பாக கொண்டிருக்கும் ஜாதியினர்கள்—தென்னாட்டில் அவர்கள் ஆதிக்கம் அதிகமாய் பெற்றிருப்பதினால்-செய்யும் சூழ்ச்சிகளினாலோ,தம் ஒழுக்கம் ஆசாரம்,நாகரீகம், கல்வி முதலியவைகளை அறவே கைவிட்டு, தாழ்த்தப்பட்ட வகுப்பின் நிலைமையில் இருந்துவந்தும், அச்சமூக தலைவர்கள் விடாமுயற்சியினாலும், உண்மை தொண்டினாலும், மஹாநாடுகள் கூடி முன்னேற்றக்குறிகளை காட்டிவருவது, போற்றத்தக்கதாயிருக்கிறது. இது இவ்வகுப்பாரின் முன்னேற்றக்குறியை மாத்திரம் காட்டுவதுடன் நிற்கவில்லை. இந்நாட்டில் அமர்ந்திருக்கும் மற்ற பிரிவினர்களுக்கும் ஒரு தூண்டுகோலாகயிருக்கிறதென்றால் மிகையாகாது. ஊருக்கிளைத்தவன் பிள்ளையார் கோவில் ஆண்டி, என்ற நம் தமிழ் நாட்டு பழமொழி பலர் அறிந்ததே. கிராம வாழ்க்கையை கவனித்தால் இப்பழமொழியின் உண்மை விளங்கும். ஆனால் சுதந்திரப்போர் நடந்துவரும் இந்நாளில் தாழ்த்தப்பட்ட வகுப்பாரின் உரிமைகளைக்காக்கவும் மீட்கவும், அவதாரம் என்று, அறிவாளிகளால் கருதப்படும் மகாத்மாஅவர்கள் பிறந்த இந்நாளில்,ஒரு வகுப்பினர், மற்றொரு வகுப்பினரை அடிமைப் படுத்தி நடத்தும் வழக்கம் எவ்வாறு நீடிக்கும்? அவ்வழக்கம்-அறிவாளிகள் அங்கீகரிக்காத அக்கொடியவழக்கம்—நீடித்திருக்க முடியாதென்பதை இவ்வகுப்பினர்—கோவம்சத்தினர்கள் என்று அழைத்துக் கொள்பவர்கள்-ரூபித்து வருகிறார்கள். இப்பிரிவினர்கள் ஒன்றுபட்டு, இத்தகைய மஹாநாடுகள் கூடுவதற்கு காரணமாயிருந்துவரும், திருவாளர், பழனிசாமி பண்டாரம் அவர்களுக்கும், அவருக்கு இத்துறையில் துணைபுரியும் அவருடைய நண்பர்களுக்கும், இத்துறையில் மேன் மேலும், ஊக்கமும் உற்சாகமும் உண்டாகும்படி கடவுள் அருள் புரிவாராக.

ஆனால் செய்வன திருந்தச் செய்வது தான் முறை. இத்தகைய சந்தர்ப்பங்களில் ஏதேனும் மாற்றமாகச்சொன்னால்,கட்டின வீட்டிற்கு வித்தகம் பேச வந்துவிட்டதாக, நிந்தனையும் வரக்கூடும். ஆனால் என் விண்ணப்பத்தை முற்றும் கேட்ட பிறகு என்னுடைய வார்த்தைகள் வித்தகமாககருதப்பட மாட்டாதென்றே நம்புகிறேன்.

தொடக்கத்தில் இம்மகா நாட்டிற்கு கொடுக்கப்பட்டிருக்கும் பெயரே, பொருத்தமற்றதாயும் பொருளற்றதாயுமிருக்கிறது. இது ஒரு வகுப்பைப்பற்றிய மஹாநாடாகையினால், அவ்வகுப்பிற்கு உரிய பெயராலேயே அழைக்கப்படுவதுதான், நியாயமும் முறையுமாகும். ஆனால் இம்மஹாநாட்டிற்கு கோ—வம்சத்தினர்கள் மஹாநாடு என்று பெயர் கொடுத்திருக்கிறார்கள். கோ—வம்சமென்றதற்கு பொருத்தமேயில்லை. இவ்வகுப்பார் சம்மந்தப்பட்டவரையில் இம்மஹாநாட்டின் பிரமுகர்களை நேரில் சந்தித்தபோது, கோவம்சமென்பதற்கு பொருள் யாது என்று வினவியபோது, கோவில்பூஜை செய்யும் வம்சமென்றும், கோ—பசுவின்—வம்சமென்றும் பலவாராக சொன்னார்கள். இப்பொருளுக்கும், அவ்வகுப்பிர்க்கும் யாதொரு சம்மந்தமுமில்லை என்பதை அவர்களுடன் நேரில் சொல்லியதுடன், அவர்களுடைய திருச்சங்கோடு மகாநாட்டிற்கும், மஹாநாட்டின் பெயரை மாற்றவேண்டிய அவசியத்தைப்பற்றியும், அதன் காரணங்களையும், விரிவாய் எழுதி அனுப்பியிருந்தேன்.

ஆனால்,அடுத்த மஹாநாட்டிற்சேனும், அதற்குரிய பெயரை வழங்குவார்கள், என்று, எதிர்பார்த்தபடி, செய்யவில்லை ஆதலால், மற்றொரு முறையும் அவர்களுக்கு ஞாபகம் மூட்ட இதை எழுதலானேன்.

நான் கூறுவதற்கு தக்க ஆதாரங்களை விரிவாக, எழுதுவதென்றால், பத்திரிக்கையில் இடவசதி குறையுமென்ற அச்சத்தால், அவசியமான சில குறிப்புகளை மட்டும் காட்டி முடிக்கிறேன். கோ—வம்சத்தினர்கள் என்று அழைத்துக்கொள்ளும் இக்கூட்டத்தினர், லிங்காயுதமதம்—வீரசைவ மதத்தைச்சார்ந்தவர்கள்.அவர்களுள் ஒவ்வொரு, ஆணும் பெண்ணும், அணிந்தும் சொண்டிருக்கும் லிங்கங்களே இதற்கு போதிய ஆதாரமாகும். சரித்திர ஆராய்ச்சிக் காரர்கள் முடிவுக்கு வந்தபடி, சுமார் 1000 வருடங்களுக்கு முன் இம்மத உத்தாரணத்திற் கென்றே அவதாரம் செய்த, பகவான் பசுவேஸ்வரர் காலத்தில் இம்மத தத்துவங்களும் கொள்கைகளும் விரிவாக்கப்பட்டதுடன், அன்னவர்காலத்தில இக்கொள்கைகளை ஏற்றுக் கொண்டவர்களெல்லாம், இம்மதத்தில் சேர்த்துக் கொள்ளப் பட்டார்கள். இம்மதத்தை ப்பற்றி விரிவாக அரிய, செந்தமிழ்ச் செல்வராகிய சிவபிரகாசர் எழுதிய பிரபலிங்கலீலை முதலிய நூல்கள் சாதகமாகும். பகவான் பசுவேஸ்வரர் தம்வாழ்நாள் பூராவும், தம் உடல் பொருள் ஆவி மூன்றையும், இம்மதக் கொள்கைகளை பரப்புவதிலும், ஏழைகளுக்கு அன்னமிடுவதிலும் கழித்தார். அவருடைய காலத்தில் இம்மதக் கொள்கைகளின் சிறப்பை அறிந்து, இம்மதத்தில் சேர்ந்தவர்கள் லக்ஷக்கணக்கிலடங்கும் என்றால் மிகையாகாது. இம்மதம் வீரசைவ மதத்தைப் பற்றி, சுருக்கமாகவும், தெளிவாகவும்- சொல்லவேண்டுமானால், அன்பு, காருண்யம் நிறைந்த சகோதரத்துவம், சமத்துவம், ததும்பும் சிறந்த தத்துவங்களை உடைய, சுதேசியத்தை விருத்திசெய்யும், ஒரு சிறந்த மதமென்றே கூறவேண்டும். பெருமை வாய்ந்த இம்மதத்தைப் பற்றி எழுதுவதென்றால் பல புத்தகங்கள் எழுதலாம். வீரசைவர்கள் ஒவ்வொருவரையும், சுத்த சைவர்களாயிருக்கும்படி அம்மதக் கொள்கை வற்புருத்துவதிலிருந்தே அம்மதம் அன்பு,காருண்யம் நிறைந்ததென்பதை ரூபிக்கின்றது. இவ்வகுப்பிலுள்ளவர்களுக்குள் சகோதரபாவனையைவிருத்தி செய்யக்கூடிய சடங்குகள் பல அம்மதச் சடங்குகளில் நிறைந்திருக்கின்றன. கல்யாணகாலங்களில், அவர்களுள் பலர் ஒரே பாத்திரத்தில், அல்லது ஒரே இலையில் உண்ணும் ஒரு சடங்கு இந்நாளிலும் இருந்துவருகிறது. சகோதர உணர்ச்சியை வளர்ப்பதற்கு இதைவிட வேறு சடங்கு என்னவேண்டும்? பிராமணர்களுள் ஐயங்கார்கள் இவ்விஷயத்தில் மிகவும் மோசம். தன்மகளைக்கொடுத்த மருமகன் வீட்டில்கூட. மாமனார் மருமகன் சமைத்த சாப்பாட்டை உண்பதில்லை. வெட்கம்! வெட்கம்!! இக்கொடுமைகளை விலக்கும் எண்ணத்துடனே தான் எச்சரிக்கையாக, வீரசைவமதத்தில் ஒரே பாத்திரத்தில் உண்ணும் வழக்கத்தை கட்டாயப்படுத்தினார்கள்போலும். சடங்கு என்ற பெயரால், இத்தகைய சடங்குகள் பல இருக்கின்றன. விரிக்கிற் பெருகும். இதைப்போலவே,சமத்துவத்தைப் பெருக்கும் சடங்குகளும் பல இருக்கின்றன. கல்யாணகாலங்களில் கல்யாணத்திற்குப் பாத்திரங்கள்உதவும் லிங்காயுத குயவனை ஸ்நானம் செய்வித்து தக்க மரியாதைகளை செய்கிறார்கள். இச்சடங்கை, ஊன்றி நோக்கும்போது, ஜாதிக்கொடுமைகளை தலையெடுக்காமலிருக்க, ஏற்படுத்திய ஒரு சடங்காயிருக்கிறது. இன்றும், லிங்காயுதர்கள் பிரபலமாயிருக்கும், ஹைதராபாத், நைஜாம் முதலிய பிரதேசங்களில் கவனித்தால், வீரசைவர்களுள்ளேயே, எல்லாவித, தொழிலாளர்களும் இருக்கிறார்கள். ஆனால் அவர்களுக்குள்வேற்றுமையில்லை. எல்லோரும் சமமாய் உண்கிறார்கள், வீரசைவர்களுள், தாரனை செய்யவும், உபதேசம்செய்யவும் மற்ற வைதீக சடங்குகளைக்கவனிக்கவும்,ஒரு பிரிவினரை நியமித்திருக்கிறார்கள். இவர்கள் ஜங்கமர்கள் எனப்படுவர். பிராமணர்களுக்கு தமிழர்கள் கொடுக்கும் மரியாதைகளைக்காட்டிலும், பன்மடங்கு அதிகமாய், ஜங்கமர்க்ளுக்கு லிங்காயுதர்கள் கொடுக்கிறார்கள்.பிராமணர்களை தமிழர்கள் வணங்கும் போது, கைகூப்பிவணங்குகிறார்கள்; ஆனால் லிங்காயுதர்கள்ஜங்கமர்களை

---

(5-ம் பக்கத்தின் தொடர்ச்சி]

களிடம் பலிக்கவில்லை. எல்லோரும் ஒரே இடத்தில் குளித்து விட்டு வீடுவந்துசேர்ந்தோம்,பாரதகாவிரிக்கரையிலும் இவ்வளவு அக்கிரமத்துக்கு தலைப்படுகிற இவர்கள் ஒருதெருவில் ஒரு குறித்த இடத்தில் என்னதான் செய்ய மாட்டார்களென்பதை நேயர்கள் கவனிக்க வேண்டும். கொடுமுடியிலுள்ள தமிழர்கள் கவனித்து தக்க ஏற்பாடு செய்வார்களென்றுநம்புகிறோம்.

மா. வெ. கருப்பண்ண செட்டியார்.

வணங்கும் போது, ஜங்கமருடைய பாதத்தில் தம் தலையை வைத்து வணங்கி மரியாதை செய்கிறார்கள். ஆனால் ஜங்கமரிடம் பிராமணனிடமிருக்கும் மோசமான குறும்புகள் இல்லை. ஜங்கமர் தன் இனத்தவர்களாகிய லிங்காயுதர்கள் வீடுகளில், தொழிலைப்பற்றிய ஜாதி வித்தியாசங்களைக்கவனியாது, அவர்கள் சமைத்த உணவை, அவர்களுடன் சமமாக உட்கார்ந்து, உண்கிறார். இது வன்றோ, : சமத்துவம். இக்காக்ஷியை இன்னும் லிங்காயுதர்களிடையில் காணலாம். இன்னும், இம்மதக் கோட்பாடுகளுள் சில, லிங்காயுதர்களால் செய்த சாமான்களையே, துணி முதலிய வைகளையும்— லிங்காயுதர்கள் உபயோகிக்கவேண்டுமென்று கட்டாயப்படுத்துவதை நோக்கில் சுதேசியத்தை உண்மையாகவே விருத்தி செய்கிறது என்பது புலனாகும்.

கடவுளைப் பூஜிக்க பிராமணர்களுக்கு மாத்திரம் உரிமை உண்டு, மற்றவர்கள், பிராமணத்தரகர்கள் மூலமாய்தான் கடவுளைவழிபடவேண்டும் என்றும் மற்றும் பலவாறாக, தம்உயர்வை காட்டி இருமாப்பை காட்டிய பொழுது, அவர்களுடைய அக்கிரமங்களை சகிக்காது, அவர்களுடன் எதிர்த்து அவர்களுடைய செய்கைகளை கண்டித்து, மதத்தின் கொள்கைகளை உள்ளது உள்ளபடி ஜனங்களுக்கு போதித்த பெருமை இம்மத்திற்கு உண்டு, பிராமணர்களைத் தவிற மற்றவர்களுக்கு கடவுளை பூஜிக்கும் அதிகாரம் இல்லை என்று அவர்கள் சொல்லிவந்தது, குற்றம் என்று கண்டித்து, இம்மதத்தில் சேர்ந்த எல்லோருக்கும், ஆண்களுக்கும், பெண்களுக்கும், லிங்கங்களை தாரணைசெய்து, எல்லோரும் கடவுளை பூஜிக்கலாம் என்பதை ரூபித்தார்கள், இன்னும் லிங்காயுதர்கள் எவ்வளவு அநாகரீகமானநிலைமையில் இறங்கி விட்டபோதிலும், தம்சடங்குகளில் எதையேனும் பிராமணர்களைக் கொண்டு, நடத்திக்கொள்ளாமலிருப்பதைப் பார்க்கலாம், வீரசைவர்களுள், ஷை வசம் செய்பவனும், மற்றும் இழிவான தொழிலாளியும் கூடலிங்கம் கட்டிக்கொண்டிருப்பான்.

இம்மாதிரி இவர்கள் ஆரம்பிக்கவே, பிராமணர்களுடைய செல்வாக்கு குறைய ஆரம்பித்தது. தர்க்கங்களினலோ, சாஸ்திர சம்மதமாகவோ, லிங்காயுதர்களை பிராமணர்களால் ஜெயிக்க முடியவில்லை. வீரசைவர்களுடைய தலைமை சுவாமியார் பல்லக்கில் தொங்க விட்டிருக்கும் வியாச அஸ்தமே, பிராமணர்களுடைய தோல்வியை நிலைநாட்டி வருகிறது. சரியானமுறையில் லிங்காயுதர்களை அடக்கவும் ஜெயிக்கவும் முடியாததினல், தம் இயற்கைப்படிசூழ்ச்சிகள் பல செய்யத்தொடங்கினர்கள். அச்சூழ்ச்சிகளை இன்றும் பகிரங்கமாக காணலாம். இவர்களுடைய சூழ்ச்சிக்கு இரையானவர்கள் தென்னாட்டு லிங்காயுதர்களே யாவர். தென்னாட்டில் பிராமணர்கள் அதிகம்; அவர்களுடைய ஆதிக்கமும் அதிகம். அவர்களுடைய ஆதிக்கமும் அதிகம், அவர்களிடையில் அகப்பட்ட லிங்காயுதர்களுடையநிலைமையைச்சொல்லவும்வேண்டுமா? பிராமணர்கள் சொன்னதெல்லாம் வேத வாக்கென்று நம்பி, அவர்களை ஆதரித்து வந்த தமிழர்களையே இந்நிலையில்— சூத்திரன்—எனவைத்திருக்கும்போது, அவர்களுடன் எதிர்த்து வாதாடி, அவர்கள் கட்டுக்குள் அடங்காத லிங்காயுதர்கள், தம்ஆதிக்கம் அதிகமாய்ப்பெற்றுள்ள நாட்டில் அகப்பட்டுக்கொண்டால் சொல்லவும் வேண்டுமா? தென்னாட்டில் விசேஷமாக, மலையாளத்தில் பிராமணர்களுக்கு செல்வாக்கு அதிகம். மலையாளத்தில் சிதறிக்கிடக்கும் லிங்காயுதர்களின் நிலைமையை கவனித்தால்மிகவும் பரிதாபமாயிருக்கிறது. அவ்விடம், பாவம், அவர்கள் தீண்டப்படாதவர்களாக, கருதப்படுகிறார்கள். அவர்களுடைய வறுமையின் கொடுமையும், அவர்களை அநாகரீகர்களாக்கி விட்டது.

கோ—வம்சத்தினர்கள் என்று, சொல்லிக்கொள்ளும், இப்பிரிவினர்களும், தொடகத்தில் சொல்லிய சிறந்த லிங்காயுதர்கள்—வீரசைவர்கள் வகுப்பைச்சேர்ந்தவர்களே யாவர். மேல் நாட்டிற்கு சென்று குடியேறிய இந்தியன், தன் நாகரீகத்தைவிட்டு, மேல்நாட்டு நாகரீகத்தையே, கொண்டவனாகி விடுவதுபோலே, தம் கூட்டத்தை விட்டுப்பிரிந்து, பிராமணர்கள் சூழ்ச்சியில் அகப்பட்ட, கோவம்சத்தினர்கள் என்று சொல்லிக்கொள்ளும் லிங்காயுதர்கள், தம் உண்மைப்பெயர்களையும் மறந்துவிட்டது, ஆச்சரியமன்று. நானும் லிங்காயுத மதத்தைச் சார்ந்தவனதலால் ஷை மத்தை சேர்ந்த கோ—வம்சத்தினர்கள் என்று, சொல்லிக்கொள்ளும், என்சகோதர, (தமிழ்)லிங்காயுதர்களுக்கு இவ்விஷயத்தைச்சொல்லுவது என்கடமைஎன்ற உணர்ச்சியின்பேரில், இதைச்சொல்லி, முன்னேற்றத்துறையில் அவர்கள் காட்டிவரும் சிறந்த குறிகளைக்கண்டுகளிப்படைகிறேன். அவர்களுடைய முயற்சி நல்லபயனை அடையும்படி, ஸ்ரீபரமேஸ்வரர் அருள் புரிவராக.

இம்மகாநாட்டிலேனும் இவ்விஷயத்தைக் கவனித்து, தம்உண்மை பெயரை மஹாநாட்டிற்கு சூட்டுவார்கள் என நம்புகிறேன். தமிழ்நாட்டு லிங்காயுதர்கள் அல்லது, வீரசைவர்கள்—மஹாநாடு என்று அழைப்பதே இதற்கு பொருத்தமாயிருக்கிறது. இப்பெயரால் நடத்தப்படும் இம்மகாநாடுகளின் நடவடிக்கைகளை, பத்திரிக்கைகளில் காணும்போது, செல்வாக்குடன் இருந்துவரும் மத்திய மாகாண லிங்காயுதர்களுக்கும், தம் இனத்தவர்கள்பால் அன்புண்டாகி, சமீபத்தில் அவர்களுடைய உதவியும் ஏற்பட சாதகமாயிருக்கும். பின் அகில இந்திய லிங்காயுதர்கள் மஹாநாடுகள் கூடும் போது, சிரமமின்றி, அவர்களுடன் ஒற்றுமைபட அனுகூலமாயிருக்கும். கோவம்சத்தினர்கள் என்ற பெயரால நடந்துவந்தால் பின்னல் ஒருவருக்கொருவர் நட்பின்றி, சந்தேகப்படவேண்டி வரும். ஆதலால் ஆரம்பத்திலேயே அதைக்கவனித்து, மஹாநாட்டின் பெயரை, தமிழ் நாட்டுலிங்காயுதர்கள் மஹாநாடு என்று மாற்றுவார்கள் என எதிர்பார்க்கிறேன்:

இவ்விஷயத்தை பராமுகம் செய்யாது அன்புடன் ஏற்று, பிரசுரித்த, நம் தலைவர், பத்திராதிபர் அவர்களுக்கும் என் மனமார்ந்த வந்தனம். வை. நடேசன்.

(2-ம் பக்கத்தின் தொடர்ச்சி]

நீர்மானத்தைப் பிரரேபித்தவர், தற்காலம் இந்தியத் தொழிலாளர்களிடமிருந்து வசூலிக்கப்படும், அபராதப்பணத்தைக் கொண்டே ஆங்கிலோ இந்தியப் பள்ளிக்கூடங்கள் நடத்தப்படுகின்றனவென்றும் இந்தியர்களுக்குக் கல்வி கொடாமலிருந்தால் தான் அவர்களை அடிமைபோல் நடத்தக் கூடுமெனக் கருதி அவ்வாறு செய்யப்படுகிறதென்றும் சுட்டிக்காட்டினர்.]

குறைகள் விசாரணை.

18. இந்தியா அரசாங்கத்தார் ஒரு கமிட்டியை நியமித்து ரயில்வேத் தொழிலாளர்கள் குறையைப்பற்றி ஆதியோடந்தமாக விசாரித்து அவற்றிற்கேற்ற பரிகாரம் சொல்லுமாறு செய்யவேண்டுமென்று இம்மகாநாடு கேட்டுக்கொள்கிறது.

19. இந்தியா சட்டத்தைத்திருத்தி இங்கிலாந்து தேச ரயில்வேச் சட்டத்தைப் போல் இந்தியாவிலும் ஒரு நடுத்தரக் கூலி நிர்ணயபோர்டை நியமிக்க ஏற்பாடு செய்யவேண்டும். இப்போர்டார் இந்தியா நிலைமையை அறிந்து தேச ஆசாரத்திற்கேற்றவாறு சௌக்கியமாக வாழப்போதுமான கூலியையும் அவர்களுடைய வேலையின் சுபாவங்களையும் நிதானித்து நிர்ணயித்து அவற்றினல் ஏற்படும் தகராறுகளைச் சமரஸமாக முடிவு செய்யவும் வேண்டும். இத்தீர்மானத்தை அரசாங்கத்தார் அங்கீகரிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்ளப்படுகிறது.

போது.

20. தினசரி சம்பளம்பெறும் தொழிலாளிகளுக்கும், வெளி ரயில்வேயில் போகக்கூடிய பாஸ் வசதிகள் மற்றவர்களுக் களிக்கப்படுவது போலவே அளிக்கப்பட வேண்டுமென்றும், அரசாங்க உத்தியோகஸ்தர்களுக் கேற்பட்டுள்ள வண்ணமே ரயில்வே சிப்பந்திகளுக்கும் பிரயாணச் செலவனுமதிக்கப்படவேண்டு மென்றும் ரயில்வே போர்டாரை இம்மகாநாடு கேட்டுக்கொள்கிறது.

21. எம். எஸ். எம். ரயில்வே, பெரம்பூர் வொர்க்ஷாப்பிலுள்ள தொழிலாளர்கள் 1924-ம் வருடம் எப்பரல் மாதத்தில் தெரிவித்துக் கொண்டுள்ள குறைகளை நிவர்த்திக்குமாறு ஏஜெண்டை இம்மகாநாடு கேட்டுக் கொள்கிறது.

22. ரயில்வேத் தொழிலாளர்கள் நன்மைக்கென ஏற்பட்டுள்ள இச்சங்கத்தின் அபிவிருத்தியை நாடி உழைப்பவர்களையும், கிளைச்சங்கங்கள் நிருவுகிறவர்களையும், மற்றச்சங்க ஊழியர்களையும் இக்காரணங்களுக்காகத் துன்புறுத்தாமலிருக்குமாறு தங்கள் அதிகாரிகளுக்குக் கண்டிப்பான உத்தரவிடுமாறு ஏஜெண்டை இம்மகாநாடு கேட்டுக் கொள்கிறது.

குறிப்பு:—

பாக்கித்தீர்மானங்களும், அகில இந்திய தொழிலாளர் காங்கிரஸ் தீர்மானங்களும் அடுத்தவாரம் வெளியிடப்படும். ப—ர்



## உண்மையான கதர்.

## கெட்டியான கதர்.

கதர் வாங்குகிறவர்கள் விலையை கவனிப்பதுடன் சரக்கு அழுத்தத்தையும், நயத்தையும், கெட்டியையும் கவனிக்கவேண்டியது முக்கியமான கடமை. தமிழ்நாடு காங்கிரஸ் கதர்போர்டாரின் உதவியாலும், மேற்பார்வையாலும், அத்தாட்சிப் பத்திரத்துடன் நடைபெறுகின்றது. கதர் போர்டாரின் விலைக்கே விற்கப்படும்.

காங்கிரஸ் அத்தாட்சிப் பத்திரம்

ஸ்ரீகாந்தி கதராலயத்தார் கைநூலால், கைத்தரியால் தயார் செய்யப்பட்ட உண்மையான கதர் உற்பத்திசெய்து நியாயமான விலைக்கு விற்கிறார்கள்.

வா. மு. தங்கப்பெருமாள்,
காங்கிரஸ்கதர் போர்டு காரியதரிசி.

ந. ராமசாமி,
மானேஜர், ஸ்ரீகாந்தி கதராலயம்,
திருப்பூர்.

வந்தேமாதரம்.

## கரூர் சுயம் கத்தர் ஜவுளிகள்.

தமிழ் நாட்டு கத்தர் போர்டாரால் நற்சாக்ஷி பத்திரம் பெற்ற கீழ்கண்ட கத்தர் ஸ்டோரில் உடை நாணயத்திலும் நெசவு அழுத்தத்திலும் நீடித்து உழைக்கக்கூடியதுமான பலரகம் வேஷ்டிகள், துண்டுகள், அங்கவஸ்திரம், வெள்ளை பீஸ்கள். ஷர்டிங், கோட்டிங், சால்வைதினுசுகள் கத்தர் போர்டின் விலைக்கே விற்கப்படும். தேவைக்கு அட்வான்சுடன் ஆர்டர் செய்யுங்கள்

S. ராமசாமி அய்யர்,
ராமவிலாஸ் கத்தர் ஸ்டோர்ஸ் கரூர்.

அத்தாட்சிப்பத்திரம்

(தமிழ்நாட்டுக் காங்கிரஸ் கமிட்டி) ஸ்ரீமான் எஸ். ராமசாமி அய்யர் ராமவிலாஸ் கத்தர் ஸ்டோர் கைநூலால் கைத்தரியால் தயார்செய்யப்பட்ட சுத்த கத்தர் துணிகளையே உற்பத்தி செய்து நியாயமான விலைக்கு விற்றுக்கொண்டிருக்கிறார்.

(ஒப்பம்) வா. மு. தங்கப்பெருமாள்,
காரியதரிசிகத்தர், இலாகா.

## நவ இந்தியா

தேசமுன்னேற்றத்துக்கென உழைக்கும் ஓர் வாரப்பத்திரிகை. ஆசிரியர். ஸ்ரீமான். டி. எஸ். தியாகராஜ ஞானியார்.

வருட சந்தா ரூ. **5.**

மானேஜர், நவ இந்தியா,
திருவாரூர், S. I Ry.

## ஓர் மஹானின் மகிமை

"அருமையான மூலிகையும் ரகைஷயும்."

குஷ்டம், க்ஷயம், முதல் சகலவித வியாதிகளும், செய்வினைகளும் நீங்கியும், புத்திர பாக்கியம் உண்டாகியும் அபாரமான எக்காரியங்களும் கோரியபடி முடிந்தும், ஏராளமான நற்சாக்ஷிகளும் சங்கத்தில் தங்கமெடலும் பெற்றவை.

எதற்காக தேவையானாலும் பதிலுக்கு ஸ்டாம்பு வைத்து கோயமுத்தூர் ஜில்லா மேட்டுப்பாளையம் பாலச்சந்திரன் ஆபீஸ் தலைவர், ஸ்ரீமான். எஸ். ஏ. கே. பிள்ளையவர்களுக்குவிபரமாக எழுதிக் கொள்வீர்களானால் சகலவிபரமும் புஸ்தகமும் கிடைக்கும்.

## "தேசோபகாரி"

பர்மாவில் விதேசி முழக்கஞ் செய்துவரும் ஓர் தமிழ் வாரப்பதிப்பு.

வருஷ சந்தா ரூபாய் ஐந்து.

மானேஜர்:— "தேசோபகாரி" லிமிடெட்,
45-36வது வீதி. ரங்கூன்.

## "தேசபக்தன்"

ஓர் தேசியத்தமிழ் பத்திரிகை.

பிரதி திங்கள், புதன், வெள்ளிதோறும் வெளிவருவது. விளம்பரத்திற்கேற்றது.

வருடசந்தா ரூபாய் 13.
வெளிநாடுகளுக்கு ரூபாய் 16.

காரியஸ்தர்,
"தேசபக்தன்" கொழும்பு.

## "தெய்வீகன்."

பார்க்கவகுல முன்னேற்றத்தை நாடியுழைக்கும் ஓர் மாத சஞ்சிகை.

பார்க்கவர்கட்கு வருட சந்தா ரூ. **2-0-0**
ஏனையோர்கட்கு வருட சந்தா ரூ. **1-8-0**

காரியஸ்தர். "தெய்வீகன்"
பொன்மலை, திருச்சி.

வெள்ளியை கொடுத்து தங்கத்தைப் பெறுங்கள்.
வந்தாலும் போனாலும் சரி என்ற லாட்டரி இல்லை.
கைமேல் பலன் கிடைக்கும்
இது ஹம்பக்கில்லை.
பட்ட பகல் போல் வெட்ட வெளிச்சமானது
ஒரு ரூபாய் வெள்ளி நாணயமாகக் கொடுத்தால் 32

## ஆதங்க நிக்ரஹ மாத்திரைகள்.

பெறலாம்.

அதனை உபயோகித்தவர்கள் அது "தங்கத்திற்குச் சமமான நிறையுள்ளதென்று" கூறியிருக்கின்றனர். மனதிலும், தேகத்திலுமுள்ள கோளாறுகளைப் போக்கடித்துப் பலஹீனம் அஜீரணம் முதலிய வியாதிகளை நாஸ்தமாக கண்டிக்கின்றது.

விபரம் வேண்டுவோர் இன்றே கிரையஜாப்தாவுக்கு எழுதுங்கள்.

ஆதங்க நிக்ஹ ஔஷதாலயம்,
26, பிராட்வே மதராஸ்.

## டைமண்ட் பிரஸ், ஈரோடு

எங்கள் அச்சாபீசில் தமிழ், இங்கிலீஷ் பாஷைகளில் நேர்த்தியான கலர் வேலைகள் அவரவர் இஷ்டப்படி குறைந்த சார்ஜ்ஜுக்கு குறித்த காலத்தில் அச்சடித்துக் கொடுக்கப்படும்.

## போட்டோ படங்கள்.

எங்கள் ஆபீசில் தற்கால நாகரீகத்திற்கேற்றவாறு உயர்தர கலர் போட்டோ படங்கள் பிடிக்கப்படும்.

K. N. பெரியசாமி நாயுடு,
புரோப்ரைட்டர்.

## முக்கிய கவனிப்பு.

### 18 காரட்டு ரோல்டு கோல்டு பிளேட் கேஸ் ரிஸ்லெட் கெடியாரங்கள்.



குடி அரசு சந்தாதாரர்களுக்கு மாத்திரம் இக்குறைந்த விலையும், உயர்ந்த பவுண்டன் பேனாவும், புதிய 1926 ஷ்த்திய அழகிய காலண்டரும் ஆர்டருக்கு இனாமாகப் பார்சலுடன் அனுப்பப்படும். சீக்கிரம் முந்துங்கள். இது நன்றாய் உழைக்கக் கூடியது. சரியான காலம்காட்டக்கூடியது. இதுபோன்ற கெடியாரங்கள் இனிவாய்ப்பதரிது. குறைந்தவிலையுள்ளது! சீக்கிரம் முந்துங்கள்!

நெ. 1, 22 காரட்டு ரோள்ட்கோள்ட் பிளேட் 5-வருஷ காரண்டியுள்ள ரிஸ்லெட் கெடியாரம் 12—0—0

நெ. 2 பொன் கில்ட் ரிஸ்லெட் கெடியாரம் தோல்பட்டையுடன் விலை 7—0—0

நெ. 3 22 காரட்டு ரோள்ட் கோள்ட் 5-வருஷ காரண்டி 15 கெம்புகள் செதுக்கிய லீவர் பாக்கட் கெடியாரம் உயர்ந்த சங்கிலியுடன் விலை ரூ. 15—0—0

விலாசம்:— நயாகரா வாட்ச் கம்பெனி தபால்பெட்டி நெ. 130, மதராஸ்

ஈரோடு டைமண்ட் பிரஸில் அச்சிடப்பெற்று ஈ. வெ. ராமசாமி நாயக்கரால் வெளியிடப்பட்டது.